உ

கணபதி துணை.

ராய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து

இலக்கணம் ஸ்ரீசிதம்பரநாதமுனிவர்

இயற்றிய

நப்பாதிரிப் புலியூர்ப் புராணம்.

இஃது

திருப்பாதிரிப்புலியூர்ச் சந்நிதி வீதியிலுள்ள

திருக்கயிலாய பரம்பரைத் திருக்கோவலூராதீனம்

ண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளால்

பரிசோதித்து

மேற்படி சுவாமிகளின் வேண்டுகோளின்படி

கூடலூர் டவுன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ம-௱-ஸ்ரீ சிதம்பரம். மு. சாமிநாதையரவர்கள்

இயற்றித்தந்த வசனத்துடன்

சென்னை:

மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[illegible] மேடாவி

கணபதி துணை.

முகவுரை

பூவின்கிழத்திபுணர்திருமார்பனு
நாவின்கிழத்திநயக்குமந்தணனு
காவின்கிழத்திகவின்கொளிந்திரனுந்
தாவாவின்பத்தனிச்சுரர்பலரும்
மூவாஞானமுனிவரர்குழாமும்
பாவார்தமிழாற்பரசிநாளுந்
தேவாதிதேவனுஞ்சிவக்கொழுந்தீச
னோவாவருள்பெற்றொருங்குடன்வாழு
மாவாழ்பாதிரிப்புலியூர்ப்புராணம்

வடமொழியி லுள்ளதெனறுங், தற்பரானந்தத் தனி
[illegible]சோதி, யுற்பவந் தொலைத்த வுறுவரோ டமர்ந்து, [illegible]
[illegible]தரிந்தாய்ந்த தீந்தமிழி, னிலக்கணப்பாவா விலையெ[illegible]
னவருத்த மடைந்திருந்த யான் திருக்காஞ்சித் தலபுரா[illegible]
[illegible]டித்துவரும்பொழுது அந்நூலாசிரியர் சரித்திரத்தா லவ[illegible]
[illegible] பன்[illegible]ருவருள் ஒருவராகிய திருக்கயிலாய பரம்பரை
[illegible]துறை[illegible] யாதீனம் இலக்கணம் சிதம்பரநாத முனிவரா[illegible]
[illegible] டிருப்பதாகத் தெரிந்து அதைப் பார்க்கப் பேரவ[illegible]
[illegible]ல விடங்களில் விசாரித்தும் புத்தகங் கிடைக்கா
[illegible]ப வ. பின்பு திருவாவடுதுறை யாதீனத்தி லிரு[illegible]
[illegible]காலேஜ் தமிழ்ப்பண்டித ரவர்களாகி[illegible]
மு. ச[illegible]ாமையைய ரவர்

முகவுரை.

து. திருவிழாச்சருக்கத்தில் முதலில் நான்கு செய்யுட்களு மில்லா
ு. இவையே யன்றி யதில் எழுவாய்க்குத் தக்க பயனிலையும்
னிலைக் கேற்ற எழுவாயுங் கிடைக்காத இடங்களும் உபமான
மேய வித்தியாசங்களும் பலவாக இருந்தன. இன்னும் ஏட்டெ
ரதி எழுதினோரால் நேர்ந்துள்ள பிழைகள் பலவுள. மெய், உயி
மெய் யெழுத்துகளின் வேறறி குறியாகிய புள்ளியும் இடையில
்லின விகற்பங்களு மில்லாதது. அதனைப் பரிசோதிக்கப் புகுந்த
னே கல்வி கற்று வருந் தன்மையி னுள்ளேன். இந்நூலைப் பரி
தித்தற் கதிகாரியாவார் இலக்கிய விலக்கணத் தேர்ச்சியும் சைவ
ிர வுணர்ச்சியும் நிரம்பவுடையா ராதலின் எனக்கு மிந்நூலுக்
வெகுதூர மென்பது குன்றின்மேலேற்றிய விளக்குப்போல
ளி தெற்றெனப் புலப்படுமாதலின் யான்விரித் தெழு
வதில்லை. அப்படி யிருந்தும் இவ்வறபுதத் தலத்தின் பெருமை
லரு மறியச் செய்யவேண்டு மென்னுமவாவும், இவ்வரியநூ
ருக்கவேண்டு மென்னு மாசையு மென்னைத் தூண்டினமை
சிற்றறிவுக் கெட்டிய அளவு பரிசோதித்து அச்சிட்டு
த லாயினேன்.

ணம் வடமொழியி லுள்ள புராணத்திற்குச் சிறிது
ல்லாதது. நாட்டுப்படலம் நகரப்படலமிரண்டும் பழை
களோ டொருங் கெண்ணத்தக்க கற்பனையையும், தமி
வகப்பொருள் புறப்பொருளிலக்கணங்களையுந் தழுவிய
றை சரித்திரங்கள் பதினாறு சருக்கங்களாகப் பகுத்
ளன. சரித்திரமுற்றும் வடமொழியிலுள்ள வண்ண
ர்த்துள்ளதோடு பற்பல விடங்களிலும் அமமொழி
க்கப்பட்டு முள்ளன. இந்நூல் கல்விகற்கும் மா
ரா யுள்ளது. சிவநேசத்தை வி...

மையயும்

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

கூடலூர் டவுன் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

சிதம்பரம். ம-ா-ா-ஸ்ரீ மு. சாமிநாதையரவர்கள்

இயற்றியது.

மாமேவு மலரொருபான் மணியொருபான் மற்பெரு
ன் மேய,தேமேவு கனியொருபாற் குடமொருபாற் றே
செறிந்து மேவப், பூமேவு பலகால்கொண் டெழுந்து
-யெம் புராரி தம்மைத், தூமேவு பூசைபுரி செயல்கா
ாழுகும் பெண்ணை காட்டில்.

தன்றுங்கு நறுங்கொன்றைத் தொடைதாங்கு
சிவனே யெங்குந், தான்றுங்கும் பரமனெனச்
ர்த்துச் சாற்றன் மானக், கூன்றுங்கும் பிறைபுல
நிறைசிகரக் கோபுரங்கள், வான்றுங்கச் சுரர்நரை
ு வடபுலிசை மாமூதூரில்.

னடிக்குச் சுரர்சித்தர் கந்திருவர் முனிவரர்க ளிமையே
தொண்டர்குழாங் கொண்டுதவம் புரிந்தருளத் தொட
நீக்கிக், கண்டவர்பின் னிரயவழி காரு
ல்கி. விண்டவழும் பாடலத்தின் பூங்

முகவுரை.

ஊயும் பாச மகற்றும் வழியையுந் தெளிவாகக் கூறுவது. தமிழ்ப்
பருங் காப்பியங்கட்குள்ள வுறுப்புகள் குறைவின்றி யமையப்பெற்
து. சமய குரவராகிய திருஞானசம்பந்த சுவாமிகளும் திருநாவுக்
ரசு சுவாமிகளுந் திருவாய்மலர்ந்தருளிய திருநெறித் தமிழாகிய
தவாரங்களினால் விதந்து கூறிய வருமைக் கதையினை யுடையது
த்துணைப்பெருஞ்சிறப்பினை யுடைய இந்நூலைத் திருத்துவதற்
று பிரதி யின்மையால் கிடைத்த ஒரு பிரதியைக் கொண்டே
வ சிற்றறிவிற் கெட்டியஅளவு திருத்தியிருக்கிறேன். இதிலுள்ள
முகளை யெனக்கு எழுதித் தெரிவிக்குங் கல்விவல்ல சான்றோர்
மிக்க நன்றியுள்ளவனாக என்றுமிருப்பேன்.

இப்புராணத்துள்ள சில சரித்திர முழு மையும் பலரும் எளிதில்
துணரும் பொருட்டுப் பொழிப்புரை போன்ற ஒரு வசன
த தமிழாசிரியரும், யான் திருத்திய காலத்து நிரம்ப
ரவர்களும், கூடலூர் டவுன் காலேஜ் தமிழ்ப்பண்டித
சிதம்பரம் மகா-ா-ா-ஸ்ரீ மு. சாமிநாதையரவர்கள
இத்துடன் சேர்த்தச்சிட்டிருக்கிறேன. இம்மு
றிக் கூட்டி முடித்த ஆண்டவைக் கொடியுயாத்
வுளின திருவருளைச் சிந்திதுள்ளேன்.

இங்ஙனம்,

சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய.

உளங்காட்டு மன்புந்திரு நுதல்காட்டும் வெண்ணீறு மொளிறு
மேனிக், க..ங்காட்டுங் கண்மணியு நிலைகாட்டுந் துறவொழுக்கும்
வின்பெற் றோங்கி, வளங்காட்டு மியற்றமிழைந் தியல்காட்டும்
கலைத்தான் மலராண் மேய, தளங்காட்டு மலர்த்துறைசை முனி
வன்சிதம் பரநாதன் றந்தான் மன்னோ. (௪)

அத்திருப்பா திரிப்புலியூர்ப் புராணமதை யரும்புலவர் நயக்கு
மாற்றாற், பத்திகொடு பன்முறையு மினிதாராய்ந் தெழுதுவோர்
கைப் பழுது போக்கிச், சுத்தமதாப் பதிப்பித்து முற்றுவித்துத் தொடு
கடல்சூழ் ஞாலந் தன்னிற், கொத்தார்ந்த புகழ்படைத்தா னியாவ
னென வினவிடில்யாங் கூறுவாமால். (௫)

தென்னவனா யரசுபுரி சிவபெருமான் றெரிந்ததமிழ்த் தெய்வ
டும், பொன்னிவளம் பெருக்கச்சென்னி கோல்பெருக்கும் புகழ்
டும் போந்தின் மாலை, மன்னவன்றன் வளநாடும் புலவர்நவில்
பாருள்கொழிக்கும் வளஞ்சா றொண்டை, நன்னாடும் பொன்னாடு
மன்னாடு நயக்குமுனைப் பாடி நாட்டில், (௬)

வினைதீர்த்துப் பவமொழிக்கும் வித்தகன்றன் றிணைநகரும்
வினைய மேய, நனைதுழாய் முகில்பூசை நனிபுரிந்து கரிசொழிந்த நக
ரும் ஞார், முனைவனார் முப்புரத்தைச் சிரித்தெரித்த வியனகரும்
முனைக்கு முன்னர்த், தனைநிகர்க்குந் தம்பெருமான் பணிபுரிந்த தலை
நகராம் புலிசை தன்னில். (௭)

நவலோ வெனநவில நனிமள்ள ரரிவாரி நாகங் காண,
காவலோ டயர்குன்ற மெனவமைத்து வையகற்றி யதுல ராய, பாவ
லோர் மனமுவப்பப் பண்டியினிற் பரிந்தளித்துட் பாடல்கொள்ளுங்,
கோவலூ ர..னைக் குருமணிகள் சிரமணியாக் குறிக்கப் பெற்றோன்

வஞ்சகஞ்செய் புலக்களிற்றின் வழிநடக்கு மனமடக்கி மாயை யெனனும், புஞ்சமலக் கட்டறுத்துப் புந்திபுரி செய லொழித்து போத மேவி,நஞ்சமணி மிடற்றிறைபி லிங்கமதை யங்கமதினலக்க பூண்டோர், தஞ்சமெனச் சரண்பணியப் பணித்தவரைத் தீனிபுர குந் தன்மை வாய்ந்தோன். (சு

எழுத்துச்சொற் பொருள்யாப்பி னணியிடற்கை யெழிலித்தே யியல்பான் மேய, வழுத்துதற வறத்தாலு மறத்தாலுந் திறத்தாலு வளர்ச்சி வாய்ந்த,விழுத்தகுநன் னடையாலு முடையாலுங் கொடை யாலும் விளங்கக் காட்டிப், பழுத்தறிவிற் பிறந்தபயன் பரித்துலகி பயனுயுற் பவித்த மேலோன். (ப

திருந்துதமிழ்த் தெய்வததி னியலதனை முனிவர்க்கு றைய் நன்னூ,லருந்தவரா யீரடியான ... நாற்பொருளையளந்து தந் மருந்தனைய மாமறைநூற் காப்பு... ற புராணநூன் மற்றெந்நூலு திருந்துமனத் தையமறத், தினகற்குஞ், சிறப்பதனிற் சிறந் தாயோன். (க

பவமகற்றும் பரப்பிரமஞ் சரவணவுற் பவனென்றே பதிட்டை செய்து, நவநவமா மணியாலு மலராலு நயந்துநனி நாளும் பூசை, தவம்புரிந்தில் லறந்துறந்து துறவறத்தி னியறெரிந்து தயங்கு மே மைச், சிவசண்முக மெய்ஞ்ஞானத தேசிகமெய்த் திருநாமஞ் சிறந் ளானே. (கூ

சருக்க அக்ராதி.

பக்கம்.	சருக்கம்.	பாடற்றொகை.
௧௭௦	அக்கினிதவஞ்செய்த சருக்கம்	௭௧
௧௯௪	அருந்தவநாயகிபூசைச் சருக்கம்	௨௫
௨௨௨	உபமன்னியர் சாபந்தீர்த்த சருக்கம்	௧௦
௧௫௫	கங்கை தவஞ்செய்த சருக்கம்	௩௮
௩௯	தலவிசிட்டச் சருக்கம்	௨௫
௨௬	திருநகரப்படலம்	௭௭
௮	திருநாட்டுப்படலம்	௧௦௬
௨௩௦	திருவிழாச்சருக்கம்	௧௫
௧௮௪	தேவிக்குக்காட்சிகொடுத்த சருக்கம்	௬௯
௭௩	தேவிதலங்கடரிசித்த சருக்கம	௮௯
௧௦௧	தேவி தவஞ்செய்த சருககம்	௮௫
௪௮	தேவி திருக்கண்புதைத்த சருக்கம்	௯௦
௯௨	தேவி பாடலவனத்துக்கு வந்த சருக்கம்	௩௬
௨௦௧	பாடல மூலச்சருக்கம்	௧௫
௧௪௦	பாடலேசர் சித்தராய்விளையாடியசருக்கம்	௭௧
௧	பாயிரம்	௩௨
௧௧௬	பிரமசீலச்சருக்கம்	௭௧
௨௨௧	புரபாலனச் சருக்கம்	௮
௨௦௬	மங்கணர் சாபந்தீர்த்தச் சருக்கம்	௬௬

மாதுரியபாகன்வளர்பாடலேசுரர்க்கு
மாதுரியபாகம்விளங்குதமிழ்—மாதுரிய
மென்றுதிருவாய்மலர்ந்தானெங்கோனறிருத்துறைசை
நன்றருளுமம்பலவாண ன.

வாலமதிசூடினன்பாதிரிப்புலியூர்வரலாற்றைவடசொல்லாலே
சீலமுனிவரர்கேட்பச்சூதமுனிசெப்பியமெய்த்திறந்தப்பாமே
ஞாலமதிற்றுறைசைவந்தசிதம்பரநாதமுனியாஞானராசன்
பாலலையிலமுதமெனச்செந்தமிழ்ப்புராவாயிரமாப்பகர்ந்தான்மன்னே

இவையேட்டுப்பிரதியிலுள்ளன. செய்தாரின்னாரென்று தெ
வில்லை.

உ

கணபதி துணை.

திருப்பாதிரிப்புலியூர்ப்புராணம்

காப்பு.

வலம்புரிவிநாயகர்.

கருணைமதமுவட்டெடுப்பமுத்திவனத்திடைதிரிந்துகளமேசுத், தருணமதியுதயமெனுந்திலகநுதனித்திலப்பூணைபூநுசெய்ய, மருணணிசேர் *தெய்விகமுற்பவுதிகமான்மிகவிருத்தமாறத்தேவர், பொருணிறை பூசனையுவந்தவலம்புரிக்கைக்களிற்றிருதாள்போற்றி வாழ்வாம.

வேறு.

முன்னவாவியபழம்பொருள்யாவையுமுனிந்து
பின்னவாவியபெரும்பொருள்யாவையுநல்கும்
பொன்னவாஞ்சடைப்பாடலேச்சுரனருள்புதல்வன்
சொன்னவாறறிகளிற்றெழிற்றுணைமலர்ச்சரணே. (உ

---

* ஆதிதெய்விகம் என்பது காற்று, மழை, வெயில் முதலியவற்றாலுண்டாகுந் துன்பங்கள். ஆதிபௌதிகம் என்பது மனிதர், மிருகம், பிசாசு முதலியவைகளால் நேரிடுந் துன்பங்களாம். ஆதியாத்மிகம் என்பது சரீரத்தைப்பற்றி வருந் தலைநோய் முதலியவையும் மனத்தைப்பற்றி காமக்குரோத முதலியவையுமாம். இது ஞானபிரதீபத்திற் கண்டது.

பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

நடேசர்.

பூமேவுமயன்மாலுஞ்சிமுறைவாத்தியமிபற்றப்புலித்தாளோனு
நாமேவுவியாகரணபாடியஞ்செய்பதஞ்சலியுநயநதுபோற்ற
வோமேவுபொருளகண்டசச்சிதாநந்தவெளியுருவமாகித்
தேமேவுமலர்மன்றுளுமைகாணநடம்புரிதாள்சென்னிசேர்ப்பாம். ()

பாடலேசர்.

பூமேவுபாதிரிவிண்படர்ந்தகன்றமணிக்கோயிற்பொலியமேவி
மாமேவுமாலயனுமூவிலைவேலம்மானும்வணங்கியேத்தத்
தாமேவுதொழிலைந்தும்பரையயற்றவனைத்துயிருந்தழைப்பவைகுங்
காமேவுபுகழ்ப்புலிசைப்பாடலேச்சுரன்பதத்தைக்கருதிவாழ்வாம். ()

பெரியநாயகியம்மை.

உரையேறுசைவநெறிவளர்ந்தேறச்சம்மணரெலாமுட்கிமாழ்கிப்
புரையேறக்கண்டவர்களானந்தக்களிப்பேறப்புகழ்நாவெந்தை
கரையேறவிட்டபிரானொருபாகம்வளர்கருணைப்பிராட்டியான
தரையேறுபுகழ்ப்புலிசைப்பெரியநாயகிசரணந்தலைமேற்கொள்வாம்.

அருந்தவநாயகி.

சொல்லாலும்வல்லாலுந்துணைத்திறமாந்தெழுந்தடாந்தகுதை வென்ற, வல்லாலும்வல்லோனைவல்லானென்றிருசுடருமலர்க்கண்கக் கொண்டே, யல்லாலும்படிபுதைத்ததல்லாவிவ்வுலகுய்யத்தவத்தும் வெல்லு, நல்லாளைப்புலிசைநகரருந்தவநாயகியுமையைப்போற்றுவாழ் வாம். (௫)

தட்சிணாமூர்த்தி.

இருளவிழ்த்தாதிகளக்லக்கடைக்கணளித்தறமாதியின்பொன்றி
னொருமுடிவேபுத்திமுத்தியாகவதிலொன்றைந்துமுணர்பத்தாகப்
பொருள்விரவப்பத்திலொன்றின்புணர்ப்பெழுத்தஞ்சக்கரத்திற்போ
தருபர், தெருளவருள்பரமகுருதட்சிணாமூர்த்திபதஞ்சிந்திப்பாமால்.

விநாயகர்.

கந்தூர்கரத்தேதானயனகபிலனுளும்புரிபூசனையுவந்து
கொந்தாரளகச்சித்திபுத்திகொங்கைக்குடத்துளமுதருந்தி
யைந்தார்கரத்திற்கோடுகனிகலசம்பாசாங்குசமவிரச்
சிந்தாமணியையணிபுலிசைத்தெய்வக்களிற்றைறவணங்குவாம். (அ)

முருகக்கடவுள்.

ஆரணமாகமமெனவைக்குஞ்செந்தமிழ்க்குங்குரவுபூண்டவருந்தேறக்
காரணமாமோரெழுத்தின்பொருள்விரித்துச்சூரரமுங்கலங்கமாட்டி
வாரணமாதொடுவள்ளிநாயகிதன்மணிப்புயத்தின்மகிழ்ந்துவாழு
மேரணிவேற்புலிசைசங்கர்க்குமரவேள்பதமலர்களிறைஞ்சிவாழ்வாம்.

வேறு. பாதிரிவிருட்சம்.

காதமூலம்பஞ்சசத்திமேனியாகவயந்துகால்
வேதந்தழைத்தாகமம்பூத்துவிமலபஞ்சாக்கரமணமாய்ச்
சோதியாண்டாகாரசுகோதயமாய்ச்சுத்தநறைவிரிக்கும்
போதவுருவாம்பாதிரியைப்புகழ்ந்துபோற்றிவணங்குவாம். (௧0)

வேறு. வயிரவக்கடவுள்.

திருணமலர்க்கோயிலிறையுச்சிமுடிக்கபாலத்தைத்தளிர்க்கையேந்தி,
யருணநீர்ப்பலிக்கிமையோர்களுடுக்கவலம்வந்துமாற்காவிநல்கி, மருண
னிசெங்குழ்விலேவேன்மணிநாக மூடிக்கையிலைவயங்கவேந்திக், கரு
ணைமறம்பூண்டெழில்செய்கடைஞாழல்வயிரவரைக்கருதிவாழ்வாம்.

திருநந்திதேவர்.

திருமறுமாலயன்முதலோர்மணிப்பிரம்பின்வழிபுரியத்தேவதேவன், கருணைவிழிகடைக்கணித்தபணிகள்புரிந்தத்துவிதக்கலப்பான்மும்மைப், பொருள்வினவிப்பெறுஞானபோதத்தைச் சனற்குமரர்போற்றநல்குங்,குருமணியைத்திருநந்திநாயகனைப்பரம்பரையிற்குறித்துவாழ்வாம்.

தமிழாசிரியர். வேறு.

மலையினிற்கடலில்வானினிற் பெருமைமுனிவரர்வணமைமயன்றறிய, வலைகடல்பருகிவிந்தியமடக்கியயிந்திரமகத்தியம்விளக்கித், துலையெனப்பூமிசமஞ்செய்தப் பொதிகைத்துணைவியோடினிதருளகொழிக்குந், தலைமைசால்கலசக்குறுமுனி துணைத்தாட்சரோருகநாளுமேத்தெடுப்பாம். (௧௩)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். வேறு.

தாதுகிலையொன்றேழாமயிலையினிற்பணினியுஞ்சமழ்ப்பவாக்கியேத்துமுதனுபமானவளவெவையும்பிரத்தியக்கத்தெய்தக்காட்டியோதுமுறைவேதமுமோதாதுணர்ந்தேமுத்தியுமீங்குதவியாண்டநாதனெழிற்பூந்தராய்க்கவுணியநாயகன்பதங்கணயந்துவாழ்வாம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திரையேறவிட்டகற்றாண்புணர்ப்பறச்சொற்றுணைப்பதிகந்திருத்தப்பாடி, விரையேறவிட்டநறையிதழிமுடியானருளால்வென்றிமேவ, *விரையேறவிட்டசமணறவுயிர்கள்பவக்கடனின்றென்றுமேறக், கரையேறவிட்டபிரான்புகழ்விளைத்தநாவரசைக்கருதிவாழ்வாம்.

* வீரை என்பது எதுகை நோக்கி முதற்குறைந்து விரையென நின்றது.

சுந்தரமூர்த்திநாயனார்.

புண்ணியம்பொலிந்தகைலைமால்வரையிற்காட்சியிற்புணரிருமடவார்
கண்ணவிவ்வுலகின்மெய்யுறுபோகமயக்குநாணனிதுனிதொலைய
வண்ணமேபலகாற்றூதினிலாடவவ்வருட்கலப்பினுல்வாய்ந்த
வெண்ணெயிலாண்டநாவலூர்நம்பிவிரைமலர்ச்சேவடிபணிவாம் (கசு)

திருவாதவூரர்.

'பேரருள்கெ.ழிக்கும்பெருந்துறைவரைப்பிற்பிரனடிசென்னியிற்சூட்டி, யாருயிர்முதலாவனைத்துமீந்தெனையுமானந்தசுகோதயத்தழுத்தென்,, றோர்மொழிவினவஞானபோதத்தையுணர்த்தவப்பதிபசுபாசச், சார்வரும்பொருளால்வாசகமளித்தவாதவூரடிகடொழுவாம். (கஎ)

சண்டேசுரநாயனு

வெண்மணலிலிங்கஞானநேத்திரத்தால்விதிமுறையாலயம்புரிந்து, கண்மணியானசிவபரம்பொருளைத்தாபனமுறையினுற்கற்பித், தெண்மலரான்பாலாதிபாற்பூசையியற்றுழிப்பிடர்செய்தாளிரண்டும், விண்மணிநிகர்க்கு மழுவினுற்றடிந்தவிறற் சண்டேசுரனையாம்பணிவாம். (கஅ)

திருக்கூட்டத்தார்.

மித்தையிவ்வுலகங்கானனீராக்கிவிரிபொருட்பரப்பெலாங்குவித்துத்
தத்துவதாத்துவிகங்களாற்குறித்துச்சாரிருமாயையினடக்கி
நித்தியவனைந்தானந்தவாரிதியினிலைதளராதவாறுவக்கு
மத்துவிதாத்தவித்தைவாழடியாரடிமலர்முடிமிசைப்புனைவாம். (கக

சந்தானகுரவர்.

பன்னரும்பெருமைச்சைவசித்தாந்தபரம்பரைநந்தியால்விளங்கத்
தென்மொழிமுறையாற்போதமெய்சசித்திசிவப்பிரகாசமென்றின்ன
முன்வழிசார்பினுமாபதியார்க்குமுதன்மைசாலருணந்திதேவர்
பொன்னடிபரவும்வெண்ணெய்மெய்கண்டதேசிகர்பூங்கழல்புகழ்வாம்.

திருப்பாதிரிப்புலியூர்ப்புராணம்.

துறைசைத்தேசிகர்கள்.

சித்தாந்தசூத்திரபாடியம்புரிந்தசிவஞானச்செல்வர்தி,பத்தர்கு
டாம்பணிதிருச்சிற்றம்பலதேசிகர் துறைசைப்பழமைமேய,மூத்தரா
ம்பலவாணக்குரவர்பணியுநமச்சிவாயமூர்த்தி, கோத்தார்ந்தமெய்
கண்டபரம்பரைவாழ்தேசிகர்தாள்குறித்துவாழ்வாம். (உக)

மற்றையசிவநேசர்கள்.

பரசிவசோதிப்பிழம்பினவதரித்தவவடிவானபஞ்சசத்திக்
குருவமெனமலிந்தெழில்செய்பஞ்சசாதாக்கியங்களொன்றாய்மல்கப்
பொருவகல்காருண்ணியமேயிலிங்கவடிவாய்விளங்கும்புலிசைநாதன்
மருவுமருட்பணிபுரியுமடித்தொண்டரெனையாள்வல்லர்மாதோ. (உஉ)

வேதவேதாந்தாதியரும்பொருள்களெவற்றினையும்விளக்குமுண்மை
ஓதரேயெனினுமரனடியார்பாலன்புநிலைநயவாராயி
னைதரேயிறைச்சிபுசித்தைபெரும்பாதகம்புரிவோரேவரேனும்
நாதநாயகனடியார்க்கன்பினரேலவர்மலர்த்தாள்புகழ்வாமாதோ. ()

வாழ்த்து. வேறு.

திருவருட்புலிசையென்னுந்திருநகர்வாழ்கவாங்கு
மருவியவேதம்வேள்விமல்குமந்தணர்கள்வாழ்க
குருபரம்பரையும்வாழ்ககோவினம்வாழ்கவேந்தன்
பொருள்வளர்மேகம்வாழ்கவாழ்கவிப்புவியோரெல்லாம். (உச)

அற்புதப்புலிசைநாதனரும்பொருட்காதைசொல்வோர்
பொற்புறவெழுதுவோர்கள்புகழ்பவர்கேட்போர்பூமேல்
நற்பலபோகமைந்தர்பன்னியர்களிப்பவுண்டு
கற்பகநிழல்வாழ்ந்துகயிலைசென்றரன்றாள்சேர்வார். (உரு)

அவையடக்கம். வேறு.

உண்டியசாயகனிமித்தகாரணமாய்ச்சகத்தியற்றக்குவமையாக,
மடமைசால்கடமுதல்வஞ்சபக்கமெனத் துணிந்துரைப்பர்வல்லோர்
நல்லோ, 'ரடிமையாயென்னையுங்கொள்பாடலேச்சுரன்கதையாத
லாலே, விடைமைசாலெனதுதமிழிகழார்கள்புகழ்ந்துரைப்பரெவர்
க்குமேலோர். (உசு)

ஈறுமகாயினர்தம்மிற்குழீஇப்புரியுமுண்டாட்டுச்சிற்றினோக்கிப்,
பெரீறுமைசார்ந்தத்தொழிற்கே யுறுதியிருமுதுகுரவர்புணர்க்குமா
போல்,வெறுமைசார்மதியினேனியற்றுதமிழ்ப்பாடலையும்விழைந்து
மேலா, மறுமைசால்பொருள்புணர்த்தி யுரைப்பரிலக்கணப்புலமை
வழிவல்லோரே. (உஎ)

நூல் வரலாறு.

தேவதேவருளுடையதிருநந்திநாயகன்பாற்சென்றுபோற்றிக்
காவலராலருச்சிக்குஞ்சனற்குமரற்கருளவவன்கருணைகூர்ந்து
யாவர்களுமபகர்ந்துய்யவேதவியாசனுக்குரைத்தவீரொன்பானு
மேவரியபுராணத்திற்சவுனகாதியர்வியந்துவினவமேனாள். (உஅ)

சைவபுராணத்திலகுசதமருவுமுருத்திரப்பேர்சார்ந்தகோடி
மெய்வளர்சங்கிதையதனிலொருமூன்றாமுத்தரகாண்டத்துமேய
பைவளர்பாம்பணியணிந்தபாடலேச்சுரன்சரிதைப்பகுதியாவுந்
தெய்வ;முனிவரர்மகிழவமுதமழைபொழிவனபோற்றெரித்துமன்னோ

பொருவருமெண்வகைப்பத்திப்புரவுபூண்டுருத்திரசாதனப்பூணீறு
விரவுதிருமேனிமிசைப்பாற்கடலிற்றுவர்க்கொடியின்விரிகோடீரக்
குருமுதலாம்வியாசமுனிதொடுத்தமுறையுளங்கொண்டேசூல்வருத
னருள்விரவுசிவக்கொழுந்தினடிபரவியுலகுய்யவறைந்தான்மாதோ.

பதிகம்.

திருவளர்பாதிரிப்புலிசைத்தலவிசிட்டந்தேவிவிழிபுதைந்தகாதை
யருண்மொழியாற்றலங்கடரிசித்தகதைபாடலமாவணஞ்சேர்காதை
மருவியவடவஞ்செய்தகதைபிரமசீலர்கதைமன்னுசித்த
வுருவொரோடகம்புரிந்தகதைகங்கைதவஞ்செய்ததுரைத்தகாதை.

அங்கிதவஞ்செய்தகதையருந்தவநாயகிக்கிறைவனருளுங்காதை
துங்கவருந்தவத்திறைவிபூசைவிதிதோன்றுபாடலத்தின்காதை
மங்கணர்சாபந்தீர்த்தகாதையுபமனியர்தவமருவுகாதை
புங்கவர்செய்புரச்சருக்கம்விழாச்சருக்கம்பதினாறுப்புகல்வாமன்றே

பாயிரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௯௨.

திருநாட்டுப்படலம்.

வள்ளல்யாவர்க்கும்வள்ளன்மைகொடுக்குமாற்குழுவும்
வெள்ளநோக்கிச்சென்றிரப்பவுண்ணுணியேவெளுத்துப்
பள்ளவார்புனலுண்டுபின்கொடுத்திடப்படர்கா
லுள்ளமின்புறப்பசுமைவாய்ந்தொலித்துடன்மீண்ட.

வெள்ளநோக்குவெண்கந்தரம்விண்ணெறிப்படர்ந்து
தெள்ளுவெண்டிரையுண்டெறிந்தவாதெரிக்கின்
வெள்ளநீரருந்தத்தமிற்குழீயின்வேற்றவையோ
ருள்ளநெக்குறப்பசமைவாய்ந்தொளிர்வதொத்திலகும்.

கந்தரக்குழாஞ்சலநிதிக்கிடருறக்கவர்கா
லுந்திசேறுவர்நீர்முகச்சுழிவினையுணர்ந்து
சிந்துவெவ்வனன்முகத்தினாற்மடித்தெனச்சிதறி
யந்தரத்தெழுந்தாயிடைச்சொரிந்தனசிலவே.

அருளின்மேம்படுமுளத்தராம்பெரியவரறியா
மருளரீர்ஙயாசலத்தர்தீச்செய்கையைமதியார்
பொருள்கொண்டேவருமுய்வகைநாடுவோர்போன்று
தெருள்கொண்மேகமுந்தடித்திடித்திரைத்துச்சென்றனவே. (௪)

உய்யயாவர்க்குஞ்சிவனங்குறித்தவருவந்து
வெய்யராய்ந்திவர்ந்துமற்றெதிர்மறைவிளையார்
மையறீர்கனக்குழுவுமாயடைமணிவரன்று
நையுமுள்ளத்தோடமுதமேற்றிவணடைந்தனவே. (௫)

படலைமேகங்கள்கூடலிடைச்சுழிபடப்பருகு
மிடலின்வவ்விபாறருங்குலந்தொடர்ந்துவிண்ணெழினு
மடல்குறித்துளங்கொண்டிடாதகற்றுமார்வத்தான்
மடலுமயற்றவர்வருந்தினும்விழைவுறுவழக்கால். (௬)

சிற்றினத்தவராயினுந்தம்மெதிர்திளைத்தான்
முற்றுமேலராத்தெரிப்பதேபெரியவர்முயற்சி
செற்றநீக்கியகாரினமுவரையேதெளிக்கு
மற்றதன்றியேபாறயிர்மதுக்கடலடையா. (௭)

பிச்சையேற்றுணும்பெரியவர்க்கருத்திப்பின்னீந்த
மிச்சிலுண்டுளேமேம்படும்விமலரின்விளங்கு
நச்சிவந்தினுங்கந்தரஞ்சொரிந்தநீர்நந்தார்
கொச்சைதீர்ந்துண்டுநித்திலங்கொழித்தவாரிதியே. (௮)

இந்திரன்றிருவாகனமேகமென்பதனால்
வந்தகாலையில்வருணனேகுங்குமங்களபஞ்
சுந்தரந்தருபச்சையுந்தொகுத்தணிந்தனைய
விந்திரத்தனிவில்லொடுசிறந்தகாரெழிலே. (௯)

நிறையவுண்டெருண்முதிர்ந்தகாரினங்களந்நிலைதீர்ந்
திறைதரித்திலகந்தியங்கிரியின்வந்திறுத்த
பொறையுயிர்ப்பவர்காலம்வந்துறினொடிப்பொழுதுஞ்
சிறையுறுப்பினுந்தரித்திடாநீர்மையிற்சிறக்கும். (௧0)

கார்க்குழாநந்திவரையினைவட்டித்துக்கலந்து
போர்த்துமெய்யுறுபுணர்ச்சியிற்பொலிந்தனநோக்கி
னீர்க்குநாயகன்குறிஞ்சியாநிலமகட்கீந்த
வார்க்கொள்கொங்கையின்வண்ணமும்வனப்பும்வாய்ந்தனவே. (௧௧)

நந்திமால்வரைபுனிற்றிளங்கன்றெனநயந்து
வந்தகாரினமானெனமடிசுரந்தளித்தாங்
குந்தியோடுநீர்பாலெனவுவகைசெய்தொளிருங்
கந்தரந்திசைதிசைதொறுமமுதுகான்றனவே. (௧௨)

வீற்றுவீற்றுச்செல்கந்தரமமுதுண்டவியப்பா
லேற்றமானசந்தானமாகரணிபெற்றென்னப்
மாற்றிலாததோர்வடிவமாய்ப்பரந்தனசொரிந்த
தேற்றுமூலத்தின்செறிவினாலுவரற்றுச்சிறந்தே. (௧௩)

சொரிந்தகாரினஞ்சந்தனத்தொகுதியுஞ்சும்மை
விரிந்தவாவியுமேதினியெங்கணும்விளைவிற்
கரிந்தகானினுங்காவினுங்கண்ணகன்பரப்பு
மெரிந்ததாபத்துமிம்மெனச்சொரிந்திறுத்தனவே. (௧௪)

கொண்டல்வண்ணனிந்நிலமகள்கொழுநனுமுறையா
லண்டர்முல்லைநின்றேகியேகுறிஞ்சியிலணைவான்
விண்டுவார்ந்தனத்துணைவிமேல்வீழ்ந்ததைநிகர்க்கு
மண்டுகாரினங்குறிஞ்சியைப்புதையமண்ணியவே. (௧௫)

வெற்பினுச்சியிற்சொரிந்தனமேகங்கள்விரிந்த
கற்பகத்தளிர்ச்சாரலிற்சொரிந்தனகமழு
முற்பலத்தலர்வாவியிற்சொரிந்தனவும்ப
ரற்புதத்துறையிடங்களிற்சொரிந்தனவன்றே. (கசு)

சொரிந்தசோலையின்றிவலையுள்ளணைவுறு துயர்ந்து
விரிந்தபூங்கொடிததைபன்னசாலையின்விளைவார்
பொருந்தும்யோகிகள்புக்கரும்பூரணப்பொருளை
யருந்தியையம்புல்மாரினுமார்ந்திலாதவர்போல். (கஎ)

வேறு.

நந்திமால்வரையைக்கொண்மூவிரசதகிரியிற்செய்த
இந்திரசாலமானுந்திசைதிசையிறும்பூதெய்த
வந்தவெள்ளருவிவெற்பின்வயின்றொறுமிழியுந்தோற்றங்
கந்தரம்வெளுத்தமாயாகருவியுஞ்சிவமாமாபோல். (கஅ)

பன்மணிக்குவால்களெல்லாம்வரன்றியேபடரும்வெள்ளந்
தன்மனமயக்கால்வெவ்வேறறிவினற்சார்தன்மையானு
முன்மருண்டொழுகுஞ்சிங்கழூதுகினிலருவியாற்றிற்
பின்மருண்டொழுகும்பல்பழிநபப்பிடிப்பான்போலும். (ககூ)

சந்தகிலிலவங்காதிசார்ந்தெழுகுடுமிக்குன்ற
மிந்திரன்மகட்குநாதனிருக்குமத்தாணியென்று
சந்தனங்களபந்தோய்ந்ததன்மையின்வயங்குமென்ப
வந்தரத்திழியுங்கங்கையனையவெள்ளருவிமாதோ. (உ0)

விண்ணகம்புதைத்தநந்திவரைமிசையிழிந்தவெள்ள
மண்ணகம்புதைப்பவந்ததோற்றத்தைமதித்துநோக்கிற்
பெண்ணையங்குடிலைமுன்புபிரான்றிருச்சடிலத்தேந்துங்
கண்ணகன்பெருநீர்க்கங்கைகவர்பெருங்காட்சித்தன்றே. (உக)

பலபல்வாகமுல்லைப்படர்தருங்கழுழியெல்லா
நிலவரைப்பெண்ணையாற்றினிரங்கெழுந்துலவுந்தோற்ற
மலங்கிலாவுருக்களொன்றுசாதியேயெனலாமன்றி
நலமிகுமவயவத்தோடவயவிநாட்டலாமால். (உஉ)

சந்தனத்தருவுங்கோங்குந்தண்ணறுவிருவின்கற்றைப்
பைந்துணர்த்தருவுஞ்சோதிமரத்தொடும்படரும்பெண்ணை
கந்தவேளிருக்கைசென்றுவடமுகக்கடவுள்போற்றிச்
சிந்துவைச்சாருந்தன்மைதெரித்தொளிபிறங்குமன்றே. (உங)

பொற்பிதிரனையபூவின்றுதுமேலாகப்போர்த்தாங்
கற்புதவுருவுமாகவணைதரும்பெண்ணையாறு
விற்பொலிமேருவெற்பின்றென்றிசைவிளங்குந்தெய்வ
நற்புகழ்படைத்தசாம்பூநதமெனவுரைக்கலாமால். (உச)

பலபலகுடிஞைவந்துபடர்தரும்பெண்ணையாற்றி
னிலனகழ்ந்தோடுங்கால்களெண்ணிலநிரைத்தநீர்மை
நலமிகுதருமமெண்ணிலபேதத்தானயப்பவாங்கே
குலவியபோகமவ்வாறனந்தமாங்கொள்கைகாட்டும். (உரு)

குஞ்சரஞ்சிம்புள்சிங்கங்குலவரைமூலநின்று
பஞ்சரத்தோடுபட்சிசாலமும்பாதவததின்
மஞ்சரித்திரளுமற்றும்வரும்பெண்ணைநதியின்முன்பு
கஞ்சனேவிசுவரூபங்கற்பித்தானெனவியப்பார். (உசு)

எண்ணிலாநதிநதம்மென்றிருவகையவற்றுட்பூர்வ
நண்ணியநதிகள்பெண்ணுநவிறருமூலகவற்றுட்
புண்ணியப்போகமேலாவுதவியபுகழ்மைத்தாலோ
பெண்ணையென்றிதற்குநாமமிறைமையிற்பேசுமாறே. (உஎ)

ஐந்திணைதோறுஞ்சென்றப்பொருடரும்வியங்கோள்போல
வைந்திணைதோறுஞ்சென்றுவளந்தரும்பெண்ணையாறு
வைந்திணையெழுத்தினேர்சொல்லாகியமூலந்தானே
யைந்திணைப்பொருள்போலாங்காங்கப்பெயர்படைக்குமாதோ (௨௮)

ஐந்தொழினடாத்துமீசன்செயலுயிர்க்கருளுமாயை
நந்தலும்வினைக்குமீந்துமலந்தெறுநாளுமாங்கே
சிந்துபூந்துறைபால்வாய்ந்தபெண்ணைசேர்குறிஞ்சியாதிக்
கந்தியில்வளத்தைநல்கிப்பாலையையடக்குமாலோ. (௨௯)

முதற்பொருடோறுஞ்சென்றுகருப்பொருளனைத்துமுற்றும்
பதப்பொருடெரிவிப்பார்போலுரிப்பொருள்பழகித்தானு
மிதப்பொருளெழுவாய்முற்றிலெய்துசெந்தமிழ்போற்பெண்ணை
கதப்பொலிவகன்றுவாரிகோக்குற்றுக்கலந்ததன்றே. (௩௦)

திருமுனைப்பாடிநாடுவளத்தொடுசிறக்கப்பெண்ணை
வருபுனல்கால்கடோறுமண்டியாற்றுழிகடோறும்
பெருநிதிபிறங்கச்செய்யும்பெற்றியாணிதிக்கோன்வைகு
மருமலியளகைதாழவானெனப்பிறங்குமன்றே. (௩௧)

செந்நெல்கன்னலின்முதனினுந்திருமுனைப்பாடிநாட்டின்
மன்னுநானிலத்தினைந்துதிணைவளம்வகுத்துக்கூற
வென்னளவைத்தன்றேனுமெதிரொலிபொருவநூலின்
சொன்னவாறுவமையாதியணிபெறத்தூக்கிச்சொல்வேன். (௩௨)

குறிஞ்சி.

வெற்புவிண்ணுலகின்மேற்போய்விளங்கவவ்வெற்பின்மீதி
லற்புதவகில்சந்தாதியடவியினுயர்ந்தவாங்கப்
பொற்புறுநீழன்மன்னும்பொலிவினாற்போலுமென்ப
கற்பகப்புதுப்பூந்தோவோருக்கவினுமன்றே. (௩௩)

பருப்பதம்பரிதிப்புத்தேளுலகுறப்பாதவத்தி
னுருப்பொலிவிடபமிர்துமண்டலமுலவலாற்செங்
குருப்பொலிசுடரோன்மீக்கீழிருகரங்குவித்துச்செல்ல
விருட்படுங்குறிஞ்சிதன்பாலுரிப்பொருட்கிசையவன்றே. (கச)

செஞ்சுடர்க்கிரணங்கீழ்க்கட்சேறலாற்செறிந்தவிந்து
தஞ்சுடர்க்கதிர்கண்மீக்கட்சார்தலாற்கமலந்தங்கும்
பைஞ்சுனைகுரூஉக்கட்கொக்கும்பருப்பதப்பண்பின்மேலா
விஞ்சியேவெப்பந்தட்பம்விரவியேவிளங்காநிற்கும். (கரு)

இருவகைப்புணர்ச்சியின்பமேவியகுறிஞ்சிவாழ்க்கைப்
பொருவரும்போகநோக்கியரம்பையாபுணர்ப்பாலொன்றே
மருவியதேவரெல்லாம்விழிதநிமையாதுமாழ்கி
யருமையிற்குறிஞ்சிபுக்காங்காதரித்தமருவாரால். (கசா)

விற்பொலிபுருவச்செவ்வாய்விளங்கிழைக்குறமின்போக
மற்புதக்குறிஞ்சிவேட்டாங்கமர்ந்தனன்குமரவேள்பின
பற்பலமொழிவதென்னேபருப்பதமடவார்தங்கள்
கற்பினைநோக்கிவிண்ணிற்கரந்தனரரம்பைமாதர். (கஎ)

வரிக்கடைபேட்டிஞெமலர்மணங்களுற்றியார்ந்து
விருப்பினின்மதுவுண்டின்பச்செவ்வழிவிளரிபாடும்
பொருப்பினிற்புணர்வோர்க்கேதம்புரியும்வேங்கையினைச்சாராப்
பருப்பதத்ததுசேர்பாரிசாதமும்பழித்தவன்றே. (கஅ)

ஊடலேயுணர்தலேனைப்புணர்தலென்றுற்றமூன்றி
னூடியேபிரிவேயாதிநான்கவணெய்தாவாகிற்
கூடியபுணர்ப்பொன்றன்றிமற்றையகூடாவாலவ்
வீடெனவுரைக்குமின்பங்குறிஞ்சியார்விரும்பாவாறே. (கக)

பைவிரித்தசையும்பாந்தட்பணத்தினைக்கவர்ந்துமஞ்ஞை
மெய்விரித்தொளிருந்தோற்றமிந்திரன்வேட்குநல்கக்
கைவிரித்தரத்தினத்தைக்கதிர்செயக்கொணர்ந்தாலொக்கும்
பொய்விரித்திருந்தமின்னேரிடைச்சியர்குன்றின்பொற்பே. (௬௦)

இருவிசெய் நாணம்வந்தவிளங்கிளிக்கூட்டலன்றி
யருவியாங்குன்றமொக்குமதகளிறட்டார்த்துண்ண
வரியினமதற்குமாப்பவளிக்கும்வள்ளன்மைபூண்டோர்
பெரியவர்சிறியரெனனப்பிரிக்கொணாவழக்காணமன்றே. (௬௧)

சந்தனமகில்கோங்கண்சேர்சரளமென்றினையவாகி
பைந்தருக்குலங்களோங்கறிக்கொடிபயிலுங்குன்றிற்
செந்தினையிறடியோடைவனமிவைசெறிந்துகுன்றர்
தந்திடவளரும்போகமுயன்றுறச்சாருமாறே. (௬௨)

அறையணிநல்லூர்கோவல்வீரட்டமாகியாக
விறையவனுமையாளோடமினிதுறைகுறிஞ்சிதன்னின்
மறைமுதனுறையும்வெள்ளிவரையிமவானபொன்மேருக்
குறைவிடமென்னிலாங்கப்பெருமையாருரைக்கற்பாலார். (௬௩)

மாதவன்மோகினிப்பெண்ணுருவமாபவரப்புணர்ந்த
மேதகுமாணிகாதலிலிங்கமாம்விமலன்மேவும்
பூதரம்விளங்காநின்றகுறிஞ்சியின்பொற்புவாய்ப்ப
யூரதுன்றசெய்தேன்பொன்னுமியம்பொணாவளத்தவாமால். (௬௪)

பாலை.

முல்லைநற்குறிஞ்சியென்னுமுதற்பொருட்பகுதியேமற்
றெல்லையொன்றின்றிவேனிலண்பகலெரியுமஞ்சி
யல்லலுற்றழுங்கக்கன்னியவிரொளிகாட்டுங்கோட்ட
மல்கியபாலைமென்மையறிந்தவாவகுத்துமன்றே (௬௫)

கரியமாலெழுந்துசென்றுகருங்கடல்குழியமண்டிப்
பரிபருன்முதிர்ந்துபாலைச்செல்வுழித்திவலைபாய
வெரியெழுஞ்சுடரைப்போலுமின்னெனவிசைப்பருந்தை
பொரியெனத்தெறித்துவீழ்வவத்தழல்பொருதுமன்றே. (கஅ)

செஞ்சுடர்காலைமாலைச்செவவொளிபடைத்துவிண்ணின்
மஞ்சிவர்நாப்பணைம் திமருணிறத்தழலுந்தோற்றம்
பஞ்செனச்சூரல்பம்பிப்படர்தருமுருங்கைவாய்பூ
வெஞ்சமழற்பூத்தபோலும்பாலையினெரிசேர்ந்தன்றே. (கூ)

வேறு.

கறசமைந்திடக்கரும்றழல்பாலையிற்புறவு
ம்றசெயாடவரெயிற்றியர்பறத்தினைநோக்கிப
புற்செயங்குறுமபகன்றவெள்ளிடைப்புணர்ந்துறுவோர்
முற்செய்லீலையின்முகமலர்ந்துளங்கொளச்செயுமால். (கஅ)

வேறுரைப்பதென்பகவதியம்பிகைவிமலை
யாறுசெஞ்சடையணிபிராற்கினியவாமன்னை
தேறுநண்பகலொழிந்தியாமத்தவண்செல்வாள்
கூறுகூளியுமதலத்தடியுறுகொதிப்பால். (சக)

ஆலகாலமும்பாலையுமொக்குமற்றவற்று
ளேலவாருகுழம்குமரியைநீலியென்றியம்பப்
பாலைசெய்ததுமபரன்களத்திடைக்கறுத்த
போலுமாலமேலெதுபெரிதெண்ணுமின்புலவீர். (சு0)

முல்லை.

நாரணப்பிரான்வைகுபரந்தனர்ந்தையாதி
யாரணத்தொறுவாயுதிததடைதருமுல்லைக்
காரணத்தினைக்கருதியேகணணன்வந்துதித்துத்
தாரணிக்கெலாமிக்கதன்னிடமெனவிருந்தான். (ருக)

அமுதவார்கலிவயிறுளைந்தின்றவானமுதை
யமுதருண்ணவீந்தனனஃதன்றியேயயன்மா
லமுதநல்கலின்வளந்தருமுல்லையானமுதை
யமுதர்பாற்கள்ளியுண்டனனங்கிலச்சுவையால். (ருஉ)

கரந்துபாற்கடற்புத்தமுதுண்டவக்கவிஞற்
புரந்தரப்பெயர்முதலியோரண்டராய்ப்பொலிவா
ரரந்தைதீர்த்தருள்கவலியநாடொறுமயில்வோர்
வரந்தருமுல்லைக்கண்டராய்வாழ்வதும்வழக்கால் (ருங)

குறிஞ்சிமுன்னதெய்வுறுருவகைக்கோவருத்தனத்தை
யறஞ்செய்தன்கையாற்பரித்தொருமுல்லையான்புரந்தான்
மறஞ்செயும்பிரிவுற்றவரிருப்பதென்வழக்கைப்
புறம்பதாக்கியேபூமியோடுறைந்தனன்முகுந்தன் (ருச)

கட்டிவிட்டசேத்தழுவியகாளையர்தழுவ
விட்டமுற்றுறுமென்பர்களிடைச்சியரிழுந்தி
ஞெட்டறக்கடைந்தெடுத்தமோருதவுமங்கையரைத்
தொட்டானின்னிலஞ்சுரருருமொரனவண்டர்சொல்வார். (ருரு)

பிரிவிரங்கலும்பேதுறுநீர்மையாற்பிரித்துப்
புரிவுமூன்றனுட்புணர்தலுமூடலும்போலா
துருவம்வாய்ப்புறவொத்தவணிருத்தலினன்றே
மருவுமுல்லையாரிடைச்சியரிடையராய்மலிவார். (ருசு)

முயலுமிந்துவினமுதுணப்புகுந்தமுல்லை
யியலுமானிறைதிருக்கரத்தெழிறருமுருகன்பாற்
பயிலும்வாரணமித்திணையுதித்தபான்மையினு
லயிலனேற்றினிலுதித்துமால்கோப்புரந்தமர்ந்தனன். (ருஎ)

கருழிநீருறுவருடத்திற்கனைபொருதோடி
யலுழிவற்றுநீர்ப்பசையறக்காயுமாய்தொடியார்
வெலுழிவண்பொருள்வீசலின்மோகித்துவிடுங்காற்
செலுழிக்காணினுமெண்ணுருமடப்பத்தைத்தெரிக்கும். (ருஅ)

கொன்றைபூத்தொளிர்மேருவைநிகர்த்தலிற்குழக
னின்றநீர்மையைத்தெரிப்பக்காய்பசுங்கொடிநிகர்ந்தாங்
கொன்றணந்தமாய்விரியுமப்பனையுருவொப்ப
மன்றக்காணுனர்க்கற்புதவுருவமாய்வயங்கும். (ருக)

பன்னிறத்தனவரகொடசாமைபற்பதங்க
டன்னையுண்பதுபருகுவதமுதமுந்ததியும்
பொன்னைவென்றபேரொழிலினராய்ச்சியர்பொதுவ
ரென்னையோமலிபூவையினுருவமாயிருப்பார். (சு0)

ஏறுகோட்புறைமுழக்கமும்வேய்நகுழலிசையு
மாறுகாற்பறைவண்டினமுழக்கமுமாயர்
கூறுமார்ப்பொலிகுரவையின்முழக்கமுமல்லால்
வேறுமூவினத்தொலிகளுந்தனித்தனிவிரியும். (சுக)

மருதம்.

இன்னமுல்லையையுடுத்தயலெழில்பெறவிளங்குந்
தன்னையொப்பருமபழனத்தின்வளமைசாற்றுதுமா
லன்னம்வைகியபங்கயவாவிநீருறு
கன்னலட்டசாறொழுகியேசிறைதருங்கால்போல். (சுஉ)

வேறு.

சந்தனத்தருமமுற்றும்பரியெனநிறுத்திச்சாந்தப்
பைந்தழைபலாலத்திட்டவரவினையிணைத்துப்பாங்கி
னந்தமிழ்மணியுங்வேயின்முத்தமுஞ்சொரிந்துநாளுங்
கொந்துகொந்தாகக்காவ்கள்ளாடுக்குவார்குடிஞைதோறும். (சுங)

காவின்வாய்கவருநீர்போய்க்கழனிகணிறைத்துவாவி
நீலமார்ந்தலருமோடைபொங்கர்வைப்பிடநிறைக்குஞ்
சூலவோருகரத்திட்டவோதனஞ்சாரநாடிப்
பாலவூமெழுபத்தீராயிரத்தினும்பரகுமாபோல். (சுச)

நிலனும்மங்குரமும்பாய்ந்துநிலைபெறநிறுத்துகின்ற
சலமுங்கண்ணோடியாக்குஞ்செய்வினைமாக்கடாமும்
பலநியமங்கொள்ளாராயினும்பயிரும்பூவுந்
தலமதிற்பிறவிபேதச்சார்புபோலனந்தமாமால். (சுரு)

வெண்ணிறங்கருமைசெம்மைபடைத்தசேமேதிகட்டி
மண்ணினையலத்திண்கோட்டால்வடுச்செய்துமாற்றுந்தோற்றங்
கண்ணகன்பரப்புவாய்ந்தககனத்தின்கருவிக்கொண்மூ
நண்ணியவுருவம்பன்மைச்சிறுவரிநலமுங்காட்டும். (சுசு)

உழுதுசாறெளிந்துகங்குணிறத்தவாயொத்தசெய்யிற்
பழுதில்வெண்முளையனந்தம்பரப்பநந்தீன்றமுத்தம்
வழுவறவிலங்குந்தோற்றம்வானிடையுடுவுஞ்சிற்றுக்
கழுமதீர்மையலும்போலக்கலந்தொளிர்காட்சித்தாமால். (சுஎ)

வெண்ணிறந்திரிந்துபச்சைநிறத்தவாய்விளங்கும்பைங்கூழ்
மண்ணகம்புதையப்போர்த்தோர்மேனியாய்வயங்குந்தோற்ற
மண்ணறவொருபாலாகமுமையவள்கலந்தவாற்றான்
மண்மகண்மாறனாகமகிலமுங்கோடன்மானும். (சுஅ)

அந்தரத்தரம்பைமாரையுவர்த்தகவிகையைவேட்ட
விந்திரற்கினியவாகவேத்திநாற்றெடுத்துநட்ட
சுந்தரக்கழனிமாதர்தொகையினைத்தோகைநோக்கித்
தந்தமக்கினமென்றெண்ணிச்சிறைவிரித்தவன்போற்சாரும். (சுகூ)

களைகளைப்பருவம்வாயபபவுற்பலங்கமலநீலம்
வளவியசுறுந்தேனூற்றிக்கமழ்ந்தவாசத்தவேனு
மிணையவைகூடப்பற்றியகற்றுவரின்பம்வீட்டின்
விளைவுறப்பரிவோர்போகமேவினுங்கடியுமாபோல். (எ0)

புல்லர்தஞ்சார்புபற்றிக்கயவராயுறினும்போந்து
நல்லர்சென்றவரைப்பற்றிநற்கரையேற்றுமாபோப்
வல்லனதனத்தாரேனுஞ்சிற்றிடைமடவுழதிமார்க
ணல்லபங்கயநீலாதிநாடியேகளைக்கணுய்த்தார். (எக)

பங்கயங்குமுதநீலமணிச்சஞ்சைவலமும்பாரிற்
றங்கடமூறுப்பிற்கஞ்சிக்கயத்தினிற்சார்ந்தவென்றே
யங்கதற்கிரங்கிவந்தாங்ககன்களையேற்றுவார்போற்
றிங்கள்வாண்முகத்துமின்னுரீர்த்தகன்களையிற்சேர்ப்பார். (எஉ)

புண்ணியம்புரியுங்காலேவிளைக்குறைபொருட்டாழ்வாதி
யெண்ணரும்போகவாஞ்சையறிவின்மையிவற்றாலுற்ற
வணணரும்பாவமாற்றவறமவனொளிருமாபோல்
வணணவான்சாலியெல்லாங்களையறவளர்ந்தவன்றே. (எரு)

பாசொளிபடைத்துமுற்றிக்கனுக்கொண்டிபதத்தினமள்ள
ராசகனீர்கால்யாத்துக்காத்தலினுமுதகர்ப்பத்
தேசொருநிறத்தின்மன்னுஞ்சேர்ந்தபைசந்திவாக்கி
ஞேசைகொள்வன்னபேதமுறுமுறைதெரிக்குமன்றே. (எச)

வேறு.

சூன்முதிர்ந்துபைங்கருவுயிர்த்திளங்குரறுவன்றிப்
பானிறத்தவாய்ப்பசந்துபின்பன்னிறம்படைத்த
மேன்மைசால்கதிர்ச்சாலிகள்வளைமுதல்விரிந்த
பான்மைசாலருணவந்தருபேதத்திற்பயிலும். (எரு)

வேறு.

எண்ணிலாக்குடிகடத்தமிறைவனைவணங்கவன்னோர்
மண்ணொருங்காளும்வேந்தர்மலர்ப்பதம்வணங்கவேந்தர்
நண்ணியப்பொருளாமீசன்பூவடிவணங்குமாபோல்
வண்ணவான்சாலியெல்லாமவரன்முறைவணங்குமன்றே. (எசு)

தரையினின்முதிர்ந்துசாய்ந்துதயங்கொளித்தரளமுற்று
நிரைநிரைபரப்புஞ்சாலிபருவத்தாணிவப்புநோக்கி
யுரையிடைமள்ளர்நாவலோவெனவரற்றுமோசை
புரைபெறுவானம்புக்கப்புலவர்க்குமமுதமாமால். (எஎ)

கூனிரும்பங்கைப்பற்றியரிகதிரரியைக்கூட்டித்
தேனிருன்மானயாத்துச்சிரமிசைத்தரித்துவந்து
வானுறப்போக்கிமண்ணின்மாட்டிவைவேறதாக்கிப்
பானிறவெண்ணெல்செந்நெல்பருப்பதநிகர்ப்பவுய்த்தார். (எஅ)

மன்னர்கோணீக்கநின்றசாலியின்வளத்தாற்றெய்வந்
தன்னிகர்விருந்துமறைச்சுற்றமுந்தழுவிநாளுஞ்
சொன்னதென்புலத்தார்க்கீந்துநின்றவைதொகுத்துப்போக
மன்னவேயறத்தினசார்பால்வாழும்க்குடிகளெல்லாம். (எகூ)

கன்னலுங்கமுகுந்தெங்குங்கதலியுங்ககனமேவிப்
பொன்னகர்நோக்குமாபோலோங்கியபொலிவுநோக்கின்
மின்னிகர்தளாயின்மாதரவயவமென்மைகாணி
னின்னனவுவமையென்றுங்காம்பையர்க்கிசைப்பபோலும். (அ0)

ஆசினியரம்பையன்றியாசினியரம்பையென்பார்
காசொளிர்கனகமன்றிக்காசொளிர்கனகமென்பார்
பூசலும்புணர்ப்புமன்றிப்பூசலும்புணர்ப்புமோர்பால்
வீசலும்விளைவுமன்றிவீசலும்விளைவுமோர்பால். (அக)

அதிகைமாநகரமென்னுமற்புதப்பதியுமாங்கே
புதிய்போதவிழ்க்குஞ்சோலைப்பொழில்வளர்நாவலூரும்
பதிகராய்த்தடுத்தாட்கொண்டவெண்ணெயாம்பதியுமாங்கே
கதியருட்டுறையூரின்னகண்ணுதனகர்களாங்கே. (அஉ)

நெய்தல் வேறு.

மற்றமருதத்தினயனெய்தல்கழிமன்னும்
பற்றலரைவென்றமதபாணமினிதோங்கு
மற்றதனயற்பொருநல்லார்கலியினோசை
வெற்றிமுரசத்தினொடுசெங்கினொலிமேவும். (அ௩)

மணந்தமடமங்கையர்மகிழ்ந்துகளிதூங்கத்
தணந்திடைநுடங்குமடமங்கையர்கள்சாய
வணங்கிஞெடுமோகைபுரியார்கலியலைக்கைத்
துணங்கையொலிமாரன்முரசார்ப்பவிடைதோறும். (அச)

தண்டரளம்வெள்வளைதுகிர்க்கொடிதயங்கத்
தெண்டிரைமுழக்கினொடுவீசும்விலைதேர்ந்து
கண்டல்பொதிநீத்துதவுகின்றகனகத்திண்
டுண்டமஃதொத்தலர்வநெய்தறுறைதோறும். (அரு)

வாரிசொரிமுத்தினெதிர்முத்தநிரைமானக்
காருலவைநாகமுகிழ்செய்துவுறல்காணிற்
பாரினில்வெளிப்பொருள்பகர்ந்தகவிமுன்னந்
தேரவிரிகற்பனைதெளித்தகவிமானும். (அசு)

காலையினும்வெய்யவன்மதிக்கடவுள்காமர்
மாலையினுமிங்குலிகவண்ணமொடுமென்னல்
வேலையினுறுந்துகிர்விரித்தவொளிசூழ்குங்
கோலமெனலன்றியுளாகொண்டிபிறிதன்றே. (அஎ)

பரத்தியருணக்குகயல்பற்றுபுரேப்ப
வரற்றொலியினார்கலியினோதையுமடங்கு
முரட்படுமுளத்தினருமாதர்முனமுற்று
விரப்புரைபரிப்பதுலகத்தியல்பதாமால். (௮௮)

அலைத்திவலைமுத்தினொடுவீசுவவரற்றிச்
சிலைத்தநுதலார்கணவர்தேர்ச்செலவுநோக்கித்
தலைத்தலைபுலம்புதுயர்தாமுறுவபோலு
மலக்கணுறுமத்துயரம்யாரதுசகிப்பார். (௮௯)

ஆம்பலொடுநெய்தலிரவத்தலர்வகாலை
சாம்பிமுகமாழ்குவதனித்தனிபுலம்பிக்
கூம்புமடவார்களொடுகூடியவர்பொற்பின்
கீரம்பனையதோளியர்கலந்தவரையொத்தே. (௯௦)

நெய்தல்வளமற்றினிவிரிப்பதெவனோர்ந்து
மையலறுநாற்றிணைவளம்படவிதித்தப்
ஐயவருகின்றபயவாரிதியபாங்கீக
மொய்யொளியவுப்பிரதம்யாவையினுமுந்தும். (௯௧)

தத்துபணைமுல்லையினுநெய்தறலையென்னச்
சத்திபவண்வந்தவதரித்ததவமேயோ
முத்திறனொடுசெங்குகயல்வித்துருமமுப்பு
வித்துபவரின்றிவிளையும்பொருள்களெல்லாம். (௯௨)

பரத்தியருணக்குகயலுண்டுபனைநீருண்
டிரத்தகொடியோடுமடவாரவணுணைப்பார்
வரக்கரைதியெங்கொழுநனொன்னவுளமன்னச்
சரக்கொடுபுலம்பரவமேகநிரைதாழ (௯௩)

தேரொமேகன்றவவர்செப்புரைமருமற்
காரோபுணர்ந்துவருகின்றசெயல்காட்டுந்
தாரொரோமேலிந்தபுயமனனர்சலதிக்க
ணேரொடுங்குகொடிவங்கமுடனேய்வே. (௬௪)

பத்திமுதிரப்பர்கரையேறுபுலிசைப்பான்
முத்திதருசோபுரமுத்றலமலிந்த
கொத்தலர்செய்புன்னைமணம்வீசுகுலைநெய்த
லித்தகைமையென்றெவருரைக்கவெளிதம்மா. (௬௫)

வேறு.

விரித்துநானிலத்தைந்திணைவளத்தையும்விளங்க
வுரைத்தநாவலர்செந்தமிழ்ப்படிசிறிதுரைத்தாம்
புரைந்தகேள்வியோர்செவிக்கினஞ்சேய்கள்சொற்பொருவ
வுரைத்தவதிணைமயக்கமுஞ்சிற்சிலவகுப்பாம். (௬௬)

திணைமயக்கம். வேறு.

தவளவெண்சுதைமாளிகைநிகேதனந்தாவித்
துவள்கறிக்கொடிதூங்கியபற்றியதோற்றம்
பவளவேணியபராபரன்பரைகரம்பற்ற
வவளொசிந்தொல்கிளாணுமந்நிலைதெரித்தவிரும். (௬௭)

சலதிமன்னிய துகிர்க்கொடிதாய்ப்படர்ந்தேறிக்
குலவளாத்திகழ்சந்தனத்தாருவைக்குழைக்கு
நலநுகர்ந்துபின்னிவந்துறுமாடவாநயப்ப
விலவிதழ்ச்சிறுமூரலாரினுக்குசெய்கையைப்போல். (௬௮)

முல்லையாய்ச்சியர்மத்தெறியோசையுமுரணிக்
கல்லெனகும்மையிற்கலவர்களுப்பமையொலியுஞ்
சொல்லைவித்தியகழனிவாழ்மள்ளர்சொற்றொனியு
மெல்லைகாணுறினிம்பலவியக்கலொத்திசைக்கும். (௬௯)

எருமையேற்றினமுல்லையிற்குளகுணவேகு
மருவுமுல்லையாண்மருதத்தின்றுறைதொறும்பரக்குங்
கருமுகிற்குலஞ்சூன்முதிர்ந்தேகலுங்கடலின்
மருவியுண்ணச்செல்வெண்முகிற்குழாத்தையுமானும். (௧௦௦)

நாகமன்னியநாகமைநாகத்தைநிகர்ப்ப
நாகவல்லியம்பொன்னாகுமார்நாகமென்னா
னாகமும்வெரீஇநாகத்தையணைவுறப்பிணித்து
நாகம்வீசுவர்சிறுமகார்நாகருமவியப்ப. (௧௦௧)

இன்னநாவலந்தீவினிற்காஞ்சியின்றென்பாற்
பொன்னிநல்வளம்பரப்புநாட்டுத்தாம்பொலிந்து
தன்னையொப்பரும்பெண்ணைநீர்பாய்ந்தகந்தழைத்து
மன்னிவாழ்வதுதிருமுனைப்பாடிமாநாடு. (௧௦௨)

அன்னநாட்டினிலாலாலசுந்தரருதிப்ப
வென்னையாள்வெண்ணைநாயகர்தடுத்தினிதாண்டார்
முன்னர்நாவினுக்கரசருமுளைதீர்ந்தக்கடலின்
மன்னியேகரையேறவிட்டாபுகழ்வளர்த்தார். (௧௦௩)

நாட்டின்மேம்படுந்திருமுனைப்பாடிநாடென்றே
யேட்டின்மன்னியகாப்பியக்கவிகளேயிசைக்கும்
பாட்டின்மன்னுசீர்ப்புலிசைமாநகர்வளப்பரப்பைத்
தோட்டலர்க்கலைச்செல்வியென்னாவினுற்றுதிப்பாள். (௧௦௪)

திருநாட்டுப்படலம் முற்றிற்று.

(ஆகச்செய்யுள். ௧௦௪.)

திருநகரப்படலம்.

அயன்மயன்புரிந்தமீமிசையுலகுமவனியிற்பன்னகர்வரைப்பும், பட
னவித்தெவருமுயச்செயும்புலிசைப்பாடலேசுரன்சித்தவடிவ, மியல்
றத்தரித்தாங்கருளினுவியற்றவெழிலுமிந்நகர்க்கிணைசொல்வா, ரட
ற்பொதுவுண்மையறிவுருவறிவின்றிரிபினரன்றியொன்றிலரே. (௧)

பண்ணவர்தமதுதானமும்விமலப்பாடலநகரமுநோக்கி, யண்ணலே
சிருட்டிபுரிந்தகாரணத்தான்முதற்பொருள்பரிணமித்ததுவா, மெண்
ணுமம்முலகமயன்வினையதனாற்காரியகாரியத்தியன்ற, வண்ணமாமெ
னவோர்ந்தனர்கொலோபார்த்துவிழியிமையாதாழ்ந்தனரால். (௨)

வேறு.

நெட்டிலைப்பசுமுப்புடைக்கனி யுதிர்க்குநாளிகேரங்கள் விண்
ணெருங்க, வட்டவாங்கமுகுஞ்சிறுபழுக்காய்கள்வயங்கமற்றவை
தொடர்ந்தெழுவ, வொட்டிவான்கதலித்தாற்றொடும்பொலிவவுயர்ந்
தவரிழிந்தவரேற்பபோர், கட்டயாவருமேன்மேலுறநாடுங்காட்சியை
த்தனித்தனித்தெரிக்கும்.

ஒள்ளொளிகுளிரவிரிகதிர்மதியோன்மேனியிற்பூம்பட ரங்கரு
வைக், கள்ளலர்ததும்பவுலவையானலைந்துசதுலவக்கலையமிழ்தகன்
ற, வெள்ளிடைபோலுங்களங்கமென்றெவரும்விரிப்பதுமுயல்கலை
யென்று, தெள்ளியோருரைக்குமாற்றமுமென்றுற்றணடலையுயர்வு
செப்பரிதால். (௩)

வள்ளைவாய்க்குதட்டுங்கரும்பகடுழக்கவாளைதாய்ப்பாய்தவிறு
டைக்து, தெள்ளுதேனூற்றுமிருவினையுதயமதியெனச்செழுவுசெங்
கமலங், கள்ளொரமுலைக்குங்காலையினதனைக்கண்டரக்காம்பர்கண
கைக்கும், புள்ளொலியருநீலோற்பலவாவியெண்ணிலப்பொலிவவந்
நகர்க்கே. (௫)

தோட்டலர்க்கமலக்காட்டுவெள்ளனந்தன் றுணையொடுமெருவுறு துறங்கப், பேட்டெனமூடிப்புனலிடைப்பாய்ந்தபெற்றியவனகிழன் றிழுதுங், காட்டுவதட்த்திற்கமலத்தினிழல்கள்கரங்களாற்பற்றியீர் ப்பதுபோற், சேட்டொளிவிரிக்கும்வாவியிம்மாதர் செறிந்தரமகளிர் போன்றொழுவார். (சு)

வருமுலையுரற்கான்முறச்செவிக்கைகம்மாமதசலமூற் றெழுந்தொ ழுகத், தெருவினிற்சேறலளக்கர்நின்றெழுந்துசிறைவிரித்துலவுமை நாகப், பெருவரையெனலாமதன்வெரிந்புறத்துப்பிறங்கொளிவிமான த்தேர்நோக்கிற், பருதியஞ்சுடர்சேருதயவேதண்டப்பண்பிணைகிகர்க் குமற்றதுவே. (எ)

கரருடன்மும்மைமதப்பெருஞ்சோனைக் கடாக்களிற்றினத்திற நோக்கி, வாருதிமடுத்துக்கறுத்துவான்பொழிந்தகுயின்களும்வெள்கி விண்மறிந்த,பாரினிலிரப்போர்க்கிடையறவின்றிக்கொடுக்குமப்பண் பினர்க்கொவ்வா, வேருறும்வானவைந்தருக்குலமுமெஎ்ச்சரும்பணை வுறுவன்றே. (அ)

கரடநால்வாய்மும்மதம்பிறழ் செவிக்கார்க்கைக்களிறணைவுறும் வீதி, குரகதம்பலபூண்டொளிருமாடகத்தகொடிஞ்சிமான்றேர்பல வெதிர்வ, தரையினிற்பொன்னங்கிரியிமவானுமற்றையசயிலமூர்ந்தம் மிற், பொருவிறற்பரித்துப்போர்க்களங்குறித்துப்புகுந்தவாபோன்ற வாவணமே. (கூ)

பன்னிறவிலாழிக்கொய்யுளைக்கலனைப்பாய்பரிமான்றிரள்வேக தன்னையொத்திலாப்புன்மனமிடைதோறுந்தனித்தனிச்சுழல்வ னவன்றி, ,யன்னதுகற்பானேக்கினுமடிவைப்பகப்படாவிரைவினுல டிபார்த்தீ, தின்னவாறேகிற்றெனவனுமானத்தெணலன்றியேய்க்குரு வவையே. (கம)

ஆடவர்குந்தவீதியிற்செலுத்துமலங்குளேப்புரவிபாய்வனபார்த்,தீடழி
ந்தோடிப்பின்னுரத்தெதிர்வானென்ணிவந்திறுத்துமாட்டாது, பாட
றப்பின்சென்றலேயலேத்திரள்கள்பன்முறையின்னணம்வாவுங், கோ
டகலாதவளக்கருமொருபாலகழியாங்குறிக்குமிந்நகர்க்கே. (கக)

புடைநகர். வேறு.

எறிவனவெய்வனவியற்றுவார்சிலர்
மறிவன திரிப்பனவழங்குவார்சிலர்
குறியினினெறியுறக்கோலுவார்சிலர்
செறிவிலூகங்களேச்செலுத்துவார்சிலர். (கஉ)

குந்தமும்வேல்களுங்குறித்துநீட்டுவார்
சந்திரனிகர்த்தசக்கரமுருட்டுவார்
பந்தியினத்திரம்பலவழங்குவா
ரிந்திரசாலமொத்திளையரெண்ணிலார். (கங)

சிறைவிரிபாட்டளிசேரத்தேம்பொழி
னறையுகரீத்தமாய்கயக்கும்வீதியி
னறைகழலாடவர்செலுத்தும்யானைகள்
பொறையொடுசெல்கலப்பொலிவுபோன்றவே. (கச)

சிங்களஞ்சோனகஞ்சென்றபின்னருங்
கொங்கணங்கன்னடங்குறகிமீடரும்
வங்கம்வெந்நரகினுஞ்சுவர்க்கமற்றினுந்
தங்கிமீள்சூக்குமத்தனுவைமானுமால். (கரு)

பல்துறைப்பல்வளங்கவர்ந்தபண்ணைக
ளொல்லேவந்திந்நகர்த்துறையிலுக்கன
செல்கதிபலவினுந்தேடுசெஞ்சித
மல்கருட்குரவனுனீமாறும்பாலவே. (கசு)

பன்னிறக்கோசிகமணிப்பரப்புமற்
றுன்னரும்பொருளெலாமொருங்குதாங்கிவர்
இந்நகர்க்குதவியவங்கம்யாவையுந்
தன்னிடந்தருமுருமாயைசாலுமால் (கஎ)

முத்தமுமலைமலையொப்பமொய்ப்பன
வித்துருமங்களும்விளங்குமவ்வணு
சத்தியுஞ்சிவமுமாந்தன்மைகாட்டுவ
பத்தியிற்பலபலபண்டசாலையே. (கஅ)

சந்தனமான்மதம்புழுகுசாதிக்காய்
கந்தமிலகிலவங்கமாதிகப்பல்க
ளுந்திவந்திறுத்துவெற்பெனவுயர்த்தலா
லந்தமில்புலான்மண மகலுமத்தியே. (கக)

எவ்வகைத்தேசத்தின்வளமுமிந்நகர்க்
கவ்வியந்தீர்தரக்கொணர்ந்தளிக்குமந்
நவ்வியைநால்வகைப்பொருளுநாட்டுறூற்
செவ்வியீதென்னவேதெரிக்கலாமரோ. (உ0)

செந்நெலுந்துவரையுந்திளைக்கும்புன்பயிர்
பன்னருந்தானியப்பரப்பியாவையும்
பொன்மலைவெள்ளியம்பொற்றைமற்றைய
சின்மலையென்னவேதெரிக்குமாங்கவே. (உக)

வேறு.

கொய்யுளைப்புரவிமான்றேர்களிறுகாலாள்கள்கொள்ள
வெய்வுனவெறிவவல்லிகலனைகிம்புரியென்றின்ன
வைதறப்புரியுங்கம்மியத்தர்போன்மயனுக்கென்றுங்
கைவராமையினலன்றேமனத்தினுற்கற்பிக்கின்றான். (உஉ)

பன்னரும்புவனத்துள்ளநகர்ப்பரப்பவற்றுக்கெல்லா
மிந்நகரதிகமென்பதியாமினியியம்புமாறென்
பொன்னெடும்புணர்வைகுந்தன்புடைநகரொருபெண்ணாகித்
தன்னிகரானைப்புல்லிச்சாத்தனையுநவினுறல். (உ௬)

இடைநகர்.

புடைநகர்வளங்களின்னதெரிந்தவாபுகன்றனேனை
யிடைநகர்வளமுமுன்னூன்முறைமையாலுரைக்கின்றமா
லடல்கெழுசாதுரங்கத்ததுவிதுநாணியஞ்சு
மடநடைமஞ்ஞைபோல்வார்மல்குமாவணத்ததாமால். (உ௪)

யாணிக்கத்தியன்றகுன்றுமரகதத்தியன்றகுன்று
மாணிப்பொன்னதனாற்செய்தகுன்றுமாங்கவிர்வமாடே
வாணிக்கும்புகறேறற்றூப்புளினமுமலர்ப்பூஞ்சோலை
நாணிப்பன்மின்னாராடேலினனீர்த்தடமுமல்கும். (உ௫)

மேகமுமயிலுந்தம்மின்விரவுவமின்னுமின்று
மாகமுங்கலக்குங்காளகண்டமுமவர்வாய்ச்சொல்லும்
யோகமுற்றிருக்குந்தேவவணிநையருவர்களென்று
பாகமுற்றிருப்பரின்னோர்படைக்கணைவேறுகாட்டும். (உ௬)

கந்துகமனையகொங்கைகவினக்காரளகம்பூந்தேன்
சிந்தியவவிழக்கச்சும்பருமமுஞ்சிளைதயக்கணக
ளுந்தியின்சுழியிற்சுற்றவொண்ணுதன்மடவார்மேடைப்
பந்தடித்தெழுப்பமேன்மேலெழுவர்பார்மகிணர்நெஞ்சின். (உ௭)

தழைத்திலைபசந்துமாலிற்றயங்குமாற்கோட்டினிட்ட
விழைந்தவாடவர்கள்காணவியன்மணித்தாம்பினூச
லுழைந்தநூற்கலிர்கமின்னார்பொன்னனவாடனோக்கக்
கழிந்தமாலவர்சித்தத்துங்கன்னலிற்கணைபாய்ந்தன்றே. (உ௮)

கனகமுமணியுமின்னவயிரத்தின்கறையிலிட்டாங்
கினமடமின்னார்மன்னனிமுசலங்கொண்டிடிப்பச்சுண்ணம்
புனைதருமுடம்புமுற்றும்பொன்னெனமிளிர்வநோக்கி
னனகாமரம்பைமார்வந்தப்பணிபுரிதன்மானும். (௨௯)

தத்தையைப்பூவைப்பேட்டைத்தனிமணிக்கூட்டிலிட்டு
நித்திலங்கனிபாலூட்டிநிறைந்தசொற்பயிற்றினாலும்
வித்தகமடவார்மென்சொல்வியபபுருமையினாலன்றே
யத்தகுமங்கலார்கண்மொழியினையமுதமென்பார். (௩௦)

வேறு.

அணியுழியகலுழ்யழருஞ்சயவன
மணிமுதற்களபமீருனமங்கையர்
துணிவொடூடலிற்றுளங்குகாலத்தும்
பணிவொடுமெமளியிறபயிலும்போதுமே. (௩௧)

ஆடவரங்கலாரணியரங்கினி
னூடலின்மேகலைபற்றவுக்கண
கூடலைக்குறித்தனர்கொல்லென்றெஞ்சிய
நீடியநாணொடுநீங்கலொக்குமே. (௩௨)

பொற்படம்பலவுமோர்பூவைதன்னையே
யற்புறவெழுதியநோக்கியாவியாங்
கற்புடைமடமயில்கலந்தவெற்பொரும்
புற்பலமாதர்கொல்பன்னென்றாடுவாள். (௩௩)

ஊடிவெங்கீர்தவர்கணவரொண்முக
மாடியிற்கீறுன்றுதல்கண்டயர்வுறீஇ
வாடியகொழுநரையெதிர்ந்துமற்றவர்
தேடியதனம்பெற்றுத்தனங்கள்சேர்ப்பரால். (௩௪)

மங்கைமாரூடலிற்சிதைந்தபல்வளை
யங்கதனிடைமுத்துமரதனங்களும்
பொங்கொளிவிரிதரப்புணர்ந்துதோன்றுவ
திங்கள்செங்கதிர்பொரவிருள்கள்சீக்குமே. (௩௫)

சந்திரகாந்தமாளிகையிற்றுறுநீர்
வந்துசேரகழியார்கலியின்மன்னுமற்
றந்தநீருண்ணுமப்பரிதிகாந்தமுஞ்
சந்ததஞ்சுவற்றுவசலதிவன்னிபோல். (௩௬)

நடுநகர்.

புடைநகரிடைநகர்ப்பொலிவுசெப்பினு
மடைவினினடுநகரலங்கரிக்குவாங்
கடலொடுசக்கரவாளமேவகழ் .
திடமுறுமெயிலெனச்சிறக்குமென்பவே. (௩௭)

நாகர்தம்முலகுபொன்னுகட்பூவென
வோகையினுரைக்குமூவுலகமிந்நகர்ப்
பாகமதென்னப்பாதலத்தும்விண்ணினு
மேகியவகழியோடிஞ்சிசெப்புமால். (௩௮)

வற்றியும்பூரித்துமறுகுமாக்கட
லுற்றவிவ்வகழியோபடித்திண்மன்னுவ
தெற்றெனில்வடவைமாவிரண்டுமுண்ணினு
மற்றிதுகுறைவுறுவளமைத்தென்பவே. (௩௯)

இஞ்சியினியந்திரமெய்தலெற்றுத
றஞ்செயலளவிலசாற்றியென்பயன்
வஞ்சர்களெதிருறின்மறஞ்செய்கோலமே
யஞ்சியோடுறும்வகையணங்குசெய்யுமால் (௪0)

பொனணிலைவச்சிரக்கபாடப்பொற்புறு
மன்னிலைவாயினுன்கவற்றுளேகுவோர்க்
கெங்கிலைப்போகமுமின்றிதகாட்டலான்
மன்னுமிந்நகர்நகோவழக்கதே. (கூக)

வேசியர்வீதி.

ஒருகணப்பொழுதினிற்பலர்க்குமோகைசெய்
பெருவணப்பவினையப்பரத்தைப்பேதையாக்
கருவமாய்விழியசையாவரம்பையா
பொருவிலராகிவிண்புலவர்ப்புல்லுவார். (கூஉ)

சித்திரத்தெழுதியசெம்மையோவிய
மத்தருகணிகையரடிவைப்பஞ்சியே
நித்திகையுருவமாய்ப்பிறங்குமேலெழிற்
கொததினைவகைவகைகூறவல்லமோ. (கூங)

திருவுடனுயிர்த்தபாற்கடலிற்றேவியர்
பருவமங்கையரிவர்பருவமேழொடு
மருவியேபுதுநலம்வழங்கும்பாவைமையா
விருநிலப்பரத்தையாக்கினையுமாக்ளே. (கூச)

திருந்தியபரத்தையர்சேயர்மின்னவை
பொருந்துபொன்னுலகமுமவர்கள்பொறபதி
யருந்தவக்குழுக்களுமாகுலத்தினுல்
வருந்துவவெனில்வனப்புரைக்குமாண்பிற்றே. (கூரு)

ஆவணவீதி.

பிறர்பொருடம்பொருளிரண்டும்பேணிய
யறநிலைத்துராசுநாவொப்பவாவணத்
துறைநிலீட்த்துறுபொருள்கொண்டுவப்பினுன
மறுபொருள்யாவையும்வழங்குங்கூடமே. (கூகு)

துய்ப்பனவணிவனபுனைவருட்டுவ
மெய்ப்படுப்பனபலவேறுவேறுகொண்
டப்பெயர்ப்பொருள்களாலணிசெய்யாவணஞ்
செப்புமவ்வளகையிற்செல்வமல்குமால். (௪எ)

பல்வகைப்பூமணம்பரவியொன்றலாற்
பல்வகைச்சொற்களும்பகரவொன்றலாற்
பல்வகைநிறப்பொருள்பரவியொன்றலாற்
பல்வகைப்பொறிபுலன்படர்ந்தவல்லவே. (௪அ)

கடலினின்முகந்தகார்க்குலங்களூட்டினி
லடைவினிற்சிற்சிலவளிப்பவாவணக்
கடையினிற்காணியுந்தேடிக்காதலார்
கொடையினிலுதவுவர்கோடிகோடியே. (௪கூ)

ஐவகைப்பொன்னினுமமைத்தபல்கல
மைவகைவருணத்துளார்க்குமினபுற
வைவகைப்புலன்களுமமைக்கவாகிய
வைவகைக்கம்மியர்கடையனந்தமால். (௫0)

வேறு

மரத்தினிற்கடைந்தசெப்புமணியினிற்குயின்றசெப்பு
முரத்தினிற்கடைந்தசெப்பையொதமொளிர்தனத்தார்விற்கு
நிரைத்தமான்மதங்கத்தூரிநிறைமணமவிரிக்குஞ்செல்வப்
பரப்பினங்காடிவீதிபகர்ந்தனம்பகர்வாமற்றும். (௫க)

சங்கரசாதியர்வீதி.

மாலேனும்வருணத்தோருந்தத்தமினயந்துபெற்ற
மேலவராறுவர்கீழாய்விரிந்தவராறுவரின்ன
பாலருந்தம்மிற்கூடிப்பெற்றபல்சாதியோருஞ்
சாலவேவசதத்தவீதிநனிபெறப்பவாழ்வார். (௫௨)

வேளாளர்வீதி.

பூமகள்புதல்வராயிப்புவிமுதலுலகுக்கெல்லா
மேமுறும்போகநல்குஞ்சாலியேயாதியாவுந்
தேமறவிளைவித்தூட்டுந்தொல்குடிதுவன்றிமற்றை
நாமநீள்வருணமூன்றுநாட்டுமினவர்கள்வாழ்வார். (௫௩)

மேகமும்பணிந்துதாழ்ந்துசிறைப்படக்கொடையால்வென்று
மாகமும்புகழால்வென்றுமணிமுடிமூவேந்தர்க்கு
மோகையாற்சூட்டவல்லோர்கற்புடைமனையாரோடும்
பாகதேயத்தாலீந்தப்பாரினைவளர்ப்பர்நாளும். (௫௪)

மந்திரந்தூதுவென்றிசெலவிலாதிவாய்ந்த
தந்திரத்தலைவர்மானமேருவேளாளர்தங்குஞ்
சுந்தரச்சிகரமாடமேடைகள்சுடரும்வீதி
பந்திபந்திகளாய்மன்னுபரப்புமங்கனந்தமாமால். (௫௫)

வணிகர்வீதி.

பொன்னவமணிகளானபொருப்பெனவுயர்த்தும்பின்னு
மன்னவைவளர்க்குநீராலளகையூர்கோனுந்தாழ
மன்னியவணிகமாக்கண்மைந்தர்கள்பல்கவாழு
மின்னிவண்மாடமல்குமவீதியுமனந்தமாமால். (௫௬)

அரசர்வீதி.

செங்கதிர்க்கடவுடாமேதினகரனெனப்பேர்மன்னித்
தங்கள்வாரங்களவேறுதனித்தனிதோற்றுவித்து
மங்கவர்க்காதிவாரமென்பபோலமையாக்கியாவுந்
தங்களதெனுமன்னோர்கடங்குவீதிகளுஞ்சொல்வாம். (௫௭)

வேறு.

செய்குன்றினுமஞ்ஞைஞெயுநடிக்குந்தேய்பிடைமடமயிற்குழாமு,மை பலினுக்குமாடவாதெளியமறம்பயில்கட்கடையமிழ்தும, வெய்ய தீவிடமுநகால்வனகாலாவேற்றுமைவிளக்குவநோக்கிப், பொய்யது ண்ணிடையார்போகம்வேட்டுண்பார்புந்திலாமுன்றில்சேர்குவரால்.

ஆடகத்தியன்றசிகரமோர்பாலாவவிர்மணிவச்சிரச்சிகரம், பாடலம
ணிசேர்சிகரம்வெள்ளொளியபளிக்குபலத்தினர்சிகரந்,தேடருநீலமர
கதச்சிகரந்திசைதிசைவிளங்கவெண்சுதையார், மாடமெம்பெருமா
ன்வடிவெனவிளங்கும்வண்ணமுமனந்தமங்குளதால். (௫௯)

வேறு.

வெங்கதிர்க்குலத்துலர்ந்தவிழுத்தபுருணத்தோர்மற்றைத்
திங்கட்டங்குலத்துவந்தசெல்வராந்திறல்சான்மன்னர்
கங்கையுமதியுஞ்சூடுங்கண்ணுதலருளாலோங்கி
யெங்குளபுவியுமாண்டுமிந்நகரிருப்பர்பல்லோர். (௬௦)

மறையவர்வீதி

மறைமுழக்கருதவாய்மைமறையவரங்கிவேட்டுப்
பொறைமுதற்பலவுந்தாங்கியறுதொழிற்புரவுபூண்டாங்
கிறைவனையருச்சித்தியாகமெண்ணிலபுரிந்துவேதத
துறைபொருள்விதிப்போர்வீதியநந்தமாஙகுள்ளவாமால். (௬௧)

வைதிகசைவமுற்றும்வரன்முறைவழாதுபோற்றிப்
பையரவணிந்தவீசன்பரார்த்தவான்மார்த்தபூசை
செய்திறத்தலராய்முத்தீக்கையால்வினைதீர்த்தாளு
மையராமாதிசைவர்வீதியுமனந்தமாமால். (௬௨)

பத்தியிற்சரிதையாதிப்பணிதருகிரியாதீக்கை
சத்திசாம்பவியென்றோதுஞானதீக்கையையுந்தத்தம்
புத்திபக்குவத்துக்கேற்பவொன்றிறைற்புனிதமாக்கி
முத்திதந்தருளுஞானமுனிவரர்மடமனந்தம். (௬௩)

கலைகளெட்டெட்டுவையாகரணமாகமபுராண
நிலைவரன்முறையாற்றேர்ந்துகிச்சயித்திரப்போர்க்கியும்
புலமையிற்றலைஞசான்றோர்பொலிவுறுகழகமாங்காங்
கிலகுவசேடஞணப்பாரதியிறும்பூதெய்த. (௬௪)

வேறு.

மங்கலமனைகடோறும்புராணங்கண்மறுகுதோறும்
புங்கவர்வேள்விதோறும்பூசுரர்கிடைகடோறுஞ்
சங்கொலிகாலந்தோறுந்தருமணஞ்சாலைதோறுங்
கொங்கலரீர்ந்தர்தோறுங்கும்பம்வேதிகைகடோறும். (௬௫)

ஆரணமுழக்கமெங்குமாகமவிழக்கமெங்குந்
தோரணக்கொடிகளெங்குஞ்சுடர்மணித்தொங்கலெங்கும்
வாரணத்தொலிகளெங்குமாதராடரங்கமெங்குங்
காரணப்பொருள்சித்தேசன்கற்பித்தநகரமெங்கும். (௬௬)

வேறு.

மின்னவிர்கோபுரமேனிலங்களே
பொன்னுலகயனரிபுராரியம்பைவே
டன்னுலகிதற்கொருசான்றதீற்றினின்
மன்னியகோபுரம்வயங்குமென்பதே. (௬எ)

அருந்தவமெவரொவரியறறுவாரவண்
பொருந்தியாண்டருள்வதுபுலிஙீசநாயகன்
பெருந்திருவெலன்பதாலமயமீபேணியே
யிருந்தனதிருமதிலிடபப்பத்தியே. (௬அ)

இடபமாயகனிருந்தெழில்செயாயிடை
யிடபகேதனம்பொலிந்தேகிவிண்ணினி
லிடபமுங்கடந்தசைந்திலகல்காணுறி
னிடபமான்றன்னுலகிருப்பதேய்க்குமால். (௬௯)

பனிமணிச்சிகரத்தின்பரப்பைநோக்குழிப்
பன்மணிக்கதிர்முடியணிந்துபாடலப்
பன்மணியராவணிபரனைப்போற்றுவான்
பன்மணிநிறத்தும்பர்நெருங்கும்பாலவே. (எ0)

மாயிரும்புலிக்குளிப்புலிசைமந்திர
மாயிரங்கலையொடுமெண்ணல்வைகலாற்
பாயிருணீக்கியபரிதிவானவ
னாயிரங்கதிரொடுமெவிர்வதொக்குமால். ௭௧)

ஆகுதிச்சுடரினுங்காரசதீர்த்தத்து
மோகைசான்மண்டலத்துயரத்தாணியு
மாகமும்வாயுவும்வடிவருந்தவத்
தோகைபாலுறைவதும்பாடலேசனே. (௭௨)

பன்னிருபூமலர்பாதிரிக்கணே
யென்னையாள்சிவக்கொழுந்தீசன்வைகலா
லன்னதன்னிழலினடைந்துய்ந்தோர்கடா
மன்னுகற்பகநிழன்மதிப்பதில்லையே. (௭௩)

ஆயிடைத்தோன்றியவதிசயம்பல
தூயவாமோதமுங்கரமுஞ்சுந்தர
மேயதாண்டவமுதற்றீர்த்தமேன்மையும்
பாயவாராமமுந்தசத்தின்பாலவே. (௭௪)

இன்னவாதசந்தசஞ்சதஞ்சகத்திரஞ்
சொன்னதோர்மேன்மைகடிலங்குமாங்கது
மன்னியதேவர்கண்மதிப்பதன்றியே
யன்னமாரகசியமறியொணாததால். (௭௫)

அற்புதரகசியமனைத்துமெம்மனோர்
சொற்பொருட்பாலவாய்த்துதிக்கும்பான்மைத்தோ
பொற்புறுவியாதனும்புதைத்துரைத்தனன்
றற்பரன்பாடலச்சரிதமென்பவே. ௭௬)

சித்தராயரன்புரிதிருநகர்த்திறம்
பத்தரின்மேம்படுபதஞ்சலிக்கலா
வித்திறமெனவொணுவேனுமாநக
ரத்தலவிசிட்டமுமறிந்ததோதுவாம். (௭௭)

திருநகரப்படலமுற்றிற்று.

ஆகச்செய்யுள் ௨௧௩.

உ

சிவமயம்.

தலவிசிட்டச்சருக்கம்.

அருள்விளங்கியவுளத்தரசயாரணப்பொருளோத
தெருளுமாதவமுனிவிர்காள்சிந்தையையொருக்கிப்
பொருள்செய்பாடலப்புலிசைமான்மியத்தைமெய்ப்போத
மருளுறுவினைகேட்டேங்கொளுமெனவகுப்பான். (௧)

வேதமங்கமாகமத்தினுள்ளுறையெனவிளங்கும்
பாதவத்திருப்பாடலபுரத்தைவைப்பவத்தா
லோர்துமாத்தலமாயிரத்தெட்டினுமுயர்வா
மாகிமாநகரென்பர்களாயந்தமுதறிவோர். (௨)

புண்ணியந்திரண்டுருவமாய்ப்பொலியுமந்நகர்தா
னெண்ணுமெவ்விதபாவபேதத்தினீடழித்து
மண்ணின்மேம்படுகீர்த்தியால்வயங்குவததுவே
நண்ணுமங்களவுருவமாஞானவீடளிக்கும். (௩)

அம்பிகாபதியம்பிகையிருவருமகலா
தும்பரோடவண்கயிலையையொப்பவேவாழ்வா
ரெம்பிரானுக்கவவெள்ளிமால்வரையினுமெழில்செய்
வம்புலாமலர்ப்பாடலபுரத்துளமகிழும். (௪)

தருமமத்தமேகாமம்வீடெனவுரைசான்ற
விருமையின்பமும்வழிபடுவோர்க்கினிதளிக்கு
மொருமையாஞ்சிவஞானசாதனமுண்மைஞான
மருளுமப்பதிக்கிணையிந்தச்சகத்தினிலரிதால். (௫)

மாலின்மைந்தனுமன்மதேச்சுரத்தினுக்கணித்தாய்க்
கோலமல்கியதிருத்தில்லையுத்தரகோணத்
தாலநீழலாரதிகையின்கீழ்த்திசையத்தி
மேலதாந்திசைவிளங்குமந்நகரமாவியப்பால். (௬)

தத்துவப்பொருளுளக்கண்ணுளுள்ளமாதரித்த
சுத்தஞானிகளெண்ணிலார்சூழாநகொண்டுசூழும்
வித்தகன்றருகன்னிகாபுரத்தின்வீற்றிருப்பார்
சத்தியேசிவமாகியதனிமுதற்பரமர். (எ)

வாலகில்லியர்சித்தர்வித்தியாதரர்வசுக்கள்
சேலுலாம்விழித்தேவியர்தேவர்கடினமும்
பாலலோசனற்கன்புசெய்பாதிரிப்பதியே
சாலவும்பவித்திரமெனமறையெலாஞ்சாற்றும்.

விசித்திரந்தரும்பாடலநகரமேமேலாம்
வசித்தகீடமுங்கிருமியுந்தேவதவடிவாஞ்
சசிக்கொழுந்தணிசிவபுரஞ்சார்ந்தினிதிருந்து
புசித்துவாழ்ந்துபின்பராபரமுத்தியிற்பொலியும். (௯)

மணமதேச்சரம்—திருமாணி குழி

புராணம்யாவையுமாகமவருக்கமும்புகழுந்
தராசுராவினினுண்மையாம்படிதரித்துரைக்கு
நிராமயப்பொருளாயிரங்கலைகளாணிவக்கும்
பராபரந்தினைமுனிக்குழாம்பாதங்கள்பணியும். (௧0)

இந்திராதியரிருடிகள்பருப்பதமெழில்சேர்
சந்திராதியர்சமுத்திரந்தாரகைமுதலாம்
பந்தம்வீட்டியதேவருமனையரும்பதுமத்
தந்தணன்னிகர்மறையவர்முதலியோர்யாரும். (௧௧)

கன்னிமாவனம்பாடலவனத்தினிற்கவினப்
புன்னைபொன்சொரிபாதிரிநீழலிற்பொலிந்தே
யென்னையாளுடைச்சிவக்கொழுந்தீசனையிறைஞ்சி
மன்னுபூசனைபுரிந்துதம்பதத்தில்வைகுவரால். (௧௨)

கங்கைமன்னியகரசமேயகத்தியங்கவின்செய்
சங்குமன்னியசமுத்திரம்பிரமியந்தழலின்
றுங்கவாவியேயயிந்திரங்கெடில்மேற்சொல்லு
மங்கங்குள்ளவெண்டிசாபாலர்தீர்த்தமுமாடி. (௧௩)

பெண்ணையாடிப்பாலோடையின்மூழ்கியபெரியோ
ரண்ணலாயிரங்கலையொடுமெம்பிகைதவத்தின்
வண்ணங்காண்பதேபொருளெனக்கொண்டிவண்வைகி
நண்ணருந்தவவடிவினல்வீடுநண்ணுவரால். (௧௪)

அம்பரத்திருவுருவமாங்கன்னிகையமலச
செம்பொனுமன்றினிற்பஞ்சதசாக்கரஞ்சிறந்து
வம்புலர்மலர்ப்பாடலமூலத்தின்வளரு
மிம்பர்தேவரும்பூசித்தாங்கெய்துவர்யாவும். (௧௫

வேறுவேறினிவிரிப்பதெனமபிகைவிமலைக்
கேறுசாபமித்தலததினிற்றீர்ந்தெழிலெய்தித்
தேறமாத்தவடபுரிந்தனளெனிற்றிசைதிசையிற்
கூறலாம்படித்தனதிணையொருதலங்குறிக்கில். (கசு)

நினைக்கிலெத்துணைப்பாவமும்பொடிபட்டேகு
மனக்குவேண்டியவிசயமாரோக்கியமனனுங்
கனக்கருங்குழன்மங்கையர்புத்திரர்கலந்து
தனக்குவேண்டியசுகமெலாஞ்சார்ந்துவாழ்ந்திருப்பார். (கஎ)

அத்தலத்தினிற்புற்புதற்பிறப்பினுலணைந்து
நித்தம்வைகியவுயிர்கட்குநிருமலயோக
முத்திவீடுறமெனிலணைவுறுததெனமொழியிற்
பத்தர்யாவருமத்தலப்பெருமையேபகர்வார். (கஅ)

வன்னநான்கினின்வழிவருநிலையினின்கதனிற்
றன்னைமொப்பருமில்லறந்துறவொன்றைச்சார்ந்து
கன்னிநாயகன்சரிதையாதியவொன்றைக்கருதி
யின்னருட்பணிபுரிந்தவணிருப்பரால்யர்ரும். (கசு)

தேவதேவனேயெனத்திகழ்திருவுருவுடையூர்
நாவினுலவர்சரணங்கடுதித்துநாடோறும்
பூவில்வாழ்தருமெம்மனோர்பரகதிபுகுவா
ராவராதவினவரடியிறைஞ்சுதுமடைந்தே. (உ0)

கலைகளாயிரமவிர்கன்னிமாநகரிறைவர்க்
கிலகுகோபுரமண்டபமியந்திரபீடம்
பலர்புகழ்ந்துசொலிரதங்கள்சிற்பநூற்படியா
னலமிகச்செய்தோரிராசராசேந்திரராவார். (உக)

தெங்குபூகமாமதூகமாமலகங்கள்சிறக்கப்
பொங்கர்செய்தீருட்கன்னிமாவனத்திடைப்பொலிந்த
வெங்கணுயதர்க்களித்தவரிகத்தரசளித்துத்
தங்கிவெள்ளிமால்வரையினுந்தலைவராய்வாழ்வார். (உஉ)

வாவிகூபங்கள்வகுத்தெழிற்பாதிரிப்புலியூ
ராவியன்னைநம்மூலலிங்கேசனுக்களித்தோர்
தேவதேவர்தந்திருவுருவடைந்துசிற்பரத்தின்
மேவுவாரவர்பேற்றினைவிளம்புதற்கெளிதோ. (உ௩)

சத்திரமடஞ்சாலைகள்வளம்படவகுத்து
நித்தனெம்பிரான்பாடலநாயகனிமலன்
சுத்தமூலலிங்கேசுரன்சந்நிதிதுலங்க
வைத்தமாதவர்பதத்துகள்சிரத்தினல்வகிப்பாம். (உ௪)

என்றுசூதமாமுனிதலவிசிட்டத்தையியம்ப
வன்றுணர்ந்தனாசவுனகராதியாமுனிவ
ரின்றுமம்முறையுணர்த்தனமினியெடுத்துரைப்பா
மன்றலார்குழற்றேவிகண்புதைத்தவாவகுத்தே. (உ௫)

தலவிசிட்டச்சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்-உ௧அ.

உ

கணபதி துணை.

தலவிசிட்டச்சருக்கம்.

மங்கலமூர்த்தியும், என்றுமுள்ளவரும், எங்குநிறைந்தவரும், எல்லாமறிந்தவரும், எல்லாம்வல்லவரும், அளவிடப்படாத ஆனந்தமுடையவரும், தம்வயமுடையவரும், உயர்வும் ஒப்புமில்லாதவரும், சகலலோகத்திற்கும் ஓரேநாயகருமாகிய சிவபெருமான்; தனதருள்பெற்ற திருநந்திதேவருக்கு முதனூலான வேதத்தின்கணுள்ள புராணம் பதினெட்டையு முபதேசித்தார். அவர் தன் மாணுக்கரான சனற்குமாரமுனிவருக் குபதேசித்தார். அவர் தன் மாணுக்கரான வியாசமுனிவருக் குபதேசித்தார். அவர் தன் மாணுக்கரான சூதமுனிவருக் குபதேசித்தார். அவர், பதினெண் புராணங்களையும் சவுனகாதிமுனிவர்களுக்குச் சொல்லிவருகையில், அம்முனிவர்கள் கேட்டபொழுதே புத்திமுத்திகளைத் தருவதாகிய சைவபுராணத்துள், உருத்திரசங்கிதையில், உத்தரகாண்டத்தில், தலவிசிட்டமுதற்த சருக்கமுதல் திருவிழாச் சருக்கமிறுதியாகப் பகுத்தோதிய திருப்பாதிரிப்புலியூர்த் தலமான்மியத்தை யடியேங்களுக்கு விரித்துரைத்தருளல்வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அம்முனிவர்களுக்குச் சூதமுனிவர் கூறுவாராயினர்.

எல்லாவறிவும், எல்லாமுதன்மையும், எல்லா வநுக்கிரகமும், உடைய முழுமுதற்கடவுளாகிய பசுபதியெனப்படுஞ் சிவபெருமானது திருவருள்விளங்கிய வுளத்தராய் வேதப்பொருளைத் தெளிந்த மாதவர்காள் சித்தத்தைச் சிவக்கொழுந் தீசனடித்துணையிற் செலுத்தி யுண்மைஞானத்தை விளக்குந் தலமான்மியத்தைக் கேளுங்களென்று வகுத்துரைப்பாராயினர். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், என்னும் நான்கு வேதங்களும், காமிகாதிவாதுளமிறுதியாகிய சிவாகமமிருபத்தெட்டும், சிவதத்துவங்களும், மகாமந்திரங்களுமே தவஞ்

செய்து பாதிரிவிருக்ஷ வடிவங்கொண்டுறையப்பெற்றதாய், வேதப்பொருளாய்விளங்கியசங்கரன்கர்மசாதாக்கியத் திருவுருவங்கொண்டு அடியார்களின்பொருட் டெழுந்தருளப் பெற்றதாய், விளங்குகின்ற பாடலீபுரமானது; அன்பரின்பொருட்டனவரத தாண்டவஞ்செய்த வற்புத மூர்த்தி யெழுந்தருளிவிளங்கும் பெருமை திகழ்ந்த வாயிரத் தெட்டுத் திருப்பதியுள்ளும் மிகச்சிறந்ததாய், ஆதிபதி யென்று முனிவரரால் புகழும் பெருமையுடையது. பதிபண்ணியந் திரண் டோருருவமாய்ப் பொலியுமந்நகர், கருதற்கரிய வெவ்வகைப்பட்ட பாவங்களையும் போக்கி,யெவ்வுலகினும் மேம்படுகீர்த்தியோடு விளங்கித், தன்பால் வசிக்கப்பெற்றோர்க் கருமையாகிய வீட்டினிற்குரிய சிவஞானந்தந்து,தேவரிஷிகளோடுசிவகணங்களுஞ்சூழக்கயிலையிற் சிறந்தபெருமகிழ்ச்சியோடன்பர்க்கருளும்படி, மணங்கமழும் பூக்கள் நிரம்பியபாதிரிவிருக்ஷநிழலில்அம்பிகையோடம்பிகாபதிவீற்றிருக்கப் பெற்றதாய், தனக்கெத்தலங்களு மிணையிலாததாய் வழிபடுவோர்க் குப் புருஷார்த்தங்களை யினிது பயந்து விளங்காநிற்கும்

இப்புண்ணியத்தலமானது, தம்மினின்றும் வேறாகாத தமது திருவருளே தமக்குத் திருமேனியாகக்கொண்டு தமதருட்சத்தியும உலகமாதாவுமாகிய வுமாதேவியாரோடும் சிவபெருமானெழுந்தருளப்பெற்ற வீரட்டத்தலமாகிய திருவதிகைக்குக் கீழ்த்திசையிலும், புண்ணியதீர்த்தங்களு ளொன்றாகிய சமுத்திரத்திற்கு மேற்றிசையிலும், சாந்தோக்கியோபநிடதத்திலே கூறிய தகரமாகிய புண்டரீகபுரத்திற்கு வடக்கிலும், தக்ஷிணகங்கையாகிய பெண்ணைநதிக்குத் தெற்கிலும், மகாகைலாசமென று வியக்கும்படி விளங்கும். தத்துவத் துட்பொருளாகிய பரசிவத்தை யுளக்கண்ணாற்கண்டுமனத்தகத் திருத்தி யாதரிக்குஞ் சுத்தஞானியர் பலர் குழாங்குழாமாய் வசிக்குமத் தலத்தில் சத்தி சிவமாகிய இலிங்கத் திருவுருவங்கொண்டு முழுமுதற் கடவுள் வீற்றிருந்தருளுவர். வாலகில்லியர்களாகிய மகாவிருடியரும், தேவசாதியாராகிய சித்தர்கள், வித்தியாதரர், வசுக்

கள், சேல்போலும் அழகிய கண்களுடைய வரம்பையர், தேவர்கள் முதலியபலருமிஷ்டசித்திபெறுதற்குக் கண்ணுதற்பெருமானை வழிபட்டுவசிக்கப் பெறும்பாதிரிப்புலியூரே யடைந்தார்க்கு மிகுந்த பரிசுத்தத்தைத் தருவதென்றுபவேதமும் புகலாநிற்கும். அவ்விசித்திரமாகிய ஸ்தலத்தினில்வசிக்கும் வண்டு புழுமுதலிய பாப செந்துக்களும் தேவவடிவந்தாங்கிச் சந்திரசேகரா வாழுஞ் சிவபுரத்தையடைந்து சிவபோக நுகர்ந்து பின் முத்தியும்கூட்டும் தராசு நாவைப்போலுண்மையே கூறும் வேதாகமபுராண விதிகாச மிருதி முதலியபல சாத்திரங்களும் புகழாநிற்கும நிராமயப்பொருளனந்த கலைகளோடு விளங்குமப்பதியில் அனேக முனிவர்களும், இந்திராதி தேவர்களும், மலைத்தெய்வங்களும், அழகுவாய்ந்தவிரவி முதலிய கோள்களும் கடலரசனும், தாரகணங்களும், பந்த மறுத்த நிராசனரும், மண்ணுலகத்தரசரும், பதுமத்தண்ணலனைய வேதியரும், பிறரும் கன்னிமாவனமாகிய பாடலிவனத்தில் அழகிய பூக்களைச்சொரியும் பாதிரிமரத்தின் நிழலிலேயடைந்த சூரியபிரகாசத்தோடெழுந்தருளியிருக்குஞ் சிவக்கொழுந்தீசனை வழிபட்டு நித்தியப்பேற்றிற்குரிய பூசைபுரிந்து, வேண்டும் வரங்களைப்பெற்றனனமே வதிவர். அத்தலத்தின்கணுள்ள கங்கையிற்சிறந்த சிவகரதீர்த்தம், அகத்தியதீர்த்தம், சமுத்திரதீர்த்தம், பிரமதீர்த்தம், அக்கினிதீர்த்தம், இந்திரதீர்த்தம், கெடிலநதி, திக்பாலகதீர்த்தம், பிணிகினிநதி, பாலோடை முதலிய பல தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்தளவிலாப் பெரியோர் தவவடிவங்கொண்டு, சிதாகாசஸ்வரூபியாகியும், பஞ்சதசாக்ஷரியுமாகிய வமலை தவவடிவந்தாங்கி யருந்தவநாயகி யென்னுந்திருநாமத்தோடு நறுமணங்கமழும்மலர்நிறைந்த பாதிரி மரத்தின் மூலத்தில் எழுந்தருளி யிருக்குங் காக்ஷியைத் தரிசித்து, மீட்சியில்லா மோக்ஷம் பெற்றனர். அன்றியு மிவ்வுலகத்தார் பலரும், அனந்தேசுரரும் பூசித்து வேண்டிய சித்திகள் பெற்றனர் என்றால் வேறு விரித்தத்தல

மான் மியத்தைச் சொல்லவேண்டுவதென். சிவபெருமானால் கிடைத்த சாபநீங்கி பேரழகுவாய்ந்து தவங்கொண்டு பராசரர்தி வாழப்பெற்ற வத்தலத்திற் கிணையாக வெத்தலமுள்ளது. நிகருமுயர்வு மற்ற வத்தலமானது நினைத்தவர்கள் பாபத்தை நீக்கும். மனத்தில் நினைத்தவற்றையு மாரோக்கியத்தையுந்தரும். மைந்தரில்லா மாதருக்கு மகப்பேறு தந்து வேண்டிய சுகமெல்லா நுகரக்கொடுக்கும். அங்குள்ள புல்புதல் முதலாகிய வடிவங்கொண்ட வுயிர்கட்கும் நிருவாண யோகத்தாலெய்தும் வீடளிக்குமென்றால் பத்திசெய்வாரடையும் பேற்றையுரைப்பதென். அந்தண ரரசர், வணிகர், வேளாளர் என்னு நான்கு சாதியிலும் வகுத்த பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமெனனும் நாலாச்சிரமங்களுள் கிருகஸ்தம், சந்நியாசமென்னு மிவற்று ளொன்றைச்சார்ந்து, சரியை, கிரியை, யோகம், ஞானமென்னு நாற்பாதங்களு ளொன்றினால் திருவருட்பணிபுரிந்தங்குவாழும் பெரியோர்களை தேவதேவனென நினைத்தவர் திருவடிகளை நாவினாற்றுதித்து, நாடோறும் பூசித், தெம்மனோர் பலர் பரகதியடைவா ராயினர். ஆதலினாமுமங்குச்சென்று அவர்களை வழிபட்டுய்யக்கடவோம். கன்னிகாவனமென்னும் பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கும் பாடலிநாதருக்குத் தூலலிங்கமாகிய கோபுரம், மண்டபம், பீடம், இரதம், வாகன முதலிய வற்றைச் சிற்பசாத்திரப்படி செய்து வைத்த வரிம்மையிலரசர்க்கரசராய் மறுமையில் வீட்டின்ப மெய்துவர். தெங்கு, கமுகு, இருப்பை, நெல்லிமுதலிய மரங்களால சோலை யுண்டுபண்ணி யததேவனுக்கு அளித்தோர் சிவலோகத்தரசராய், முடிவில் சிவகணத்தரசராவர். நல்ல குளங்கள், கிணறுகள் தோண்டி, யப்பசுபதிக் களித்தவர்கள் பரசிவ திருவுருவம் பெற்று மேலுலகத்தைச் சார்ந்தடையும் பேற்றினையெனனால விளம்பக்கூடுமோ? அந்தப் பாடலேசன் திருச்சந்நிதானத்தில் அன்னசத்திரம், மடாலயம், கட்டிவைத்தவர்கள் எக்காலமும் சிவலோகத்தி லெத்தேவரும் பணிய விற்றிருக்கச் செய்வதாகிய, மேன்மையை யுடையதென்று சூதமுனிவர் கூற நிரம்பச் சந்தோஷமடைந்த சௌனகாதி ரிஷிகள் வினவுவாராயினர்.

தேவிதிருக்கண்புதைத்த சருக்கம்.

இன்னமுறையஃற்றலந்தீர்த்தமூர்த்திவிசிட்டமெடுத்துநூல்
சொன்னமுறையேயுகங்களிற்சூதமுனிவன்விரித்தியம்ப
வன்னமுறையேதலவிசிட்டமுணர்ந்தசவுனகாதியர்கண்
முன்னியொருசொல்லையமறயினவிக்கேட்கமுயல்கின்று (க)

முத்தியுதவும்புராணமூவாறும்வியாசமுனியருளாற்
பத்திபெருகவுணர்ந்தவற்றின்விளைவுத்தகுத்தின்படியெல்லாம்
புத்திபெருகநிச்சயித்தப்புலமைவாய்ந்தமுனிகேண்மோ
சத்தியமலைபரைதேவிசாபமுறக்காரணம்யாதோ. (௨)

ஆதிசத்திபராசத்தியனந்தசத்திவடிவமுமாஞ்
சோதிஞானசத்தியையந்தொழிலுந்தொடங்கித்தொடக்ககற்றிப்
பேதவுயிர்களணணியத்தைப்பெற்றுவாழவருளிறைவிக்
கேதமகன்றதென்னையெனவினவச்சூதமுனியியம்பும். (௩)

உள்ளவண்ணமுனிவிருளந்தெளியுமாறுவிரித்துரைத்தும்
பள்ளமடைபோற்பேரன்புபழுத்தமனத்தீர்கேண்மின்முனம்
வெள்ளிவரைமேற்றேவர்கணநெருங்கவிறைவன்வீற்றிருந்து
கள்ளாரளகக்கவுரியொடுஞ்சூதாடியவாகட்டுரையால். (௪)

எண்ணின்மணிபாற்சித்திரித்தாங்கியற்றுஞ்சிகரப்பரப்பனந்தம்
வண்ணம்பலவேறுடைத்தெனினும்வெண்மையுருவாய்வயங்குவன
வண்ணலகண்டாதாரசுகத்தமுந்துமுயிரம்மயமாகு
முண்மைதெரிப்பத்திருக்கயிலைவெள்ளியோங்கலொளிருமால். (௫)

வன்னம்பலவும்பற்றுதுபடிகச்சிகரமாறெரிந்து
துன்னாவரியவெள்ளிவரையொளியாலொன்றாய்த்தோன்றுவன
தன்னினிரண்டற்றெளிர்சிவத்திற்சார்ந்துகலந்ததனிமுனிவர்க்
கென்னேயுலகமன்னதிறத்திசையுமென்னவியம்புவரால். (௬)

எரியும்பசும்பொன்னிழைத்தமணிகுயின்றசிகரமெண்ணிலதிச்
சொரியும்பரிதிகாந்தமணிசுடரவிழைத்ததொல்சிகரம்
விரியுநிலவுகாலிந்துமணியாலிழைத்தவியன்சிகர
மரியபடிகம்வெள்ளியினுமிழைத்தசிகரமனந்தமால். (௭)

தாளொன்றிரண்டுமூன்றனுந்தடக்கைத்திரளுமவவாறே
வாளொன்றெயிறுவிழிசிகரம்வண்ணம்பலவாய்வயிறகன்று
நீள்பங்கிகளுஞ்சுருண்டெரியினிவக்கும்பூதப்படையவண
கோளொன்றியவானவர்பதமுங்கொள்ளுமாற்றலுடையனவே. (௮)

கங்கைமுதலாஞ்செழுந்தீர்த்தங்கலந்துவந்துபடிந்தாடிக்
தங்கள்வினைதீர்ந்திட்டசித்திசாருந்தடமாஞ்சிவகங்கை
யங்கண்வருமதன்கரையின்மடநான்கவற்றினாகமத்தின்
றங்களுணர்தேசிகர்களெவருந்துதிப்பத்துலங்குவரால். (௯)

பருதிப்புத்தேள்வெள்ளிவரைப்படரின்மதியப்பான்மையென
வுருவம்வெளுத்துத்தன்னொளிகான்றுலவுமென்னிலவவரையின்
பெருமைக்குவமையதற்கதுவேபிரசமருத்தண்மலர்ச்சோலை
யருகுபரப்புங்கதிர்சூழ்கியமலவுருவாய்வயங்குமால். (௧௦)

இன்னவனப்பார்கயிலைமலைநடுவேமகிழ்நகர்ப்பப்
பொன்னணிவினாற்பன்மணியுங்குயிற்றிப்புகழ்ச்சிக்கடங்காது
தன்னைநிகர்க்குஞ்சிறப்பினதாயயனுமாயனுஞ்சமைவியாது
மன்னுசத்திசிவாலயமாய்வதியுமாங்கோர்மணிக்கோயில். (௧௧)

தம்பம்விளங்கும்வச்சிரத்தாற்படிகந்தலமிந்திரநீல
மம்பொனடைவிற்சோபானமவிருமணிமாணிக்கமிவை
பம்பிவாயின்முப்பதினொடிரண்டாய்ப்பகல்கான்றொளிர்சிகரத்
தும்பர்போற்றவுருத்திரிகணடிப்பவுயரத்தாணிமிசை. (௧௨)

வாலவியங்கணவசத்திமணிக்காம்பிரட்டவராகிமுத
ணீலவிழியாரடப்பைமுதலெலவையுமேந்தநிமலையராங்
கோலவதனச்சசினியாதியர்கள்குழைத்தகலவைச்சே
றாலமுண்டார்க்கெடுத்தியற்றநந்திகுறிப்பினவைவிளக்க. (௧௩)

சிங்கஞ்சுமந்தசுத்தவித்தைச்சேக்கைமணியாசனத்துமையோ
டெங்கள்பெருமான்வீற்றிருக்குமேல்வைதெரிந்துகமலையெழிற்
கொங்கைக்குவட்டாலுழுதபுயப்புத்தேள்குறுகியடிபணியத்
திங்கள்கங்கையணிவேணிதிருமாலிருவென்றருள்செய்தான். (௧௪)

மூலவிலிங்கவடிவமுமாஞ்சகற்காரணனைமுறையோவென்
றோலமிடுதேவர்களுய்யக்கண்டங்கறுத்தவொருமுதலைப்
பாலவிழியான்மதனைவிபொடித்தபரமகாரணனைச்
சீலவடிவப்பரசிவனைத்தெரிசித்துய்யவாஞ்சிதராய். (௧௫)

முத்தியடைந்துந்தரிசனத்தான்முயங்குமோனமுனிவர்கண்மெய்ப்
பத்தர்தேவரிருடிகணநெருங்கிப்போற்றப்படர்காலந்
தத்தம்பதங்கள்றயனாதிதேவரணைந்துசார்ந்துசூழீஇ
நித்தனமலன்கயிலாயமலைத்தாழ்வரையினிரந்தார்கள். (௧௬)

பதினெண்கணமுமுறைமுறையாற்காவல்பூண்டவாயில்பல
விதியினகன்றுசோபானமுறையிலேற்றிவிரிஞ்சன்முதன்
முதியதேவர்சிவகங்கைத்தடத்தின்மருவிமுன்னுணர்வின்
மதியாற்கணங்கடமைவினவிநுழைக்கவாயின்மருவினார். (௧௭)

கதிர்செய்மணிக்கோபுரத்தயலேகந்திதேவர்கழல்வணங்கி
யதிருமறையாற்றுதித்தனகண்டவருமீசனடிவணங்கிப்
பதியினின்றுந்தேவரெல்லாம்பணிவானடைந்தாரெனப்பகர
விதிராதகூடய்வவரையிவண்டருதியென்றான்விமலேசன். (கஅ)

அதுகொண்டிறைதாள்வணங்கியபினந்தியவர்பாலடைந்துமக்குப்
புதியமதிபமணியெம்மானருளிப்பாடுபோதிரென
மூதிருமன்பாற்பண்ணவர்கள்சென்றுமுறையினிறைஞ்சுதலுங்
கதிர்செய்முறுவலளித்தயற்குந்தேவரெவர்க்குங்கடைக்கணித்தான்.

விரிந்துகுவியாப்பதுமமலர்விரிஞ்சன்பதம்பார்த்தனுகுநிலே
தெரிந்துவினவவவற்குறுதிசெய்தானிறையோன்புரந்தரனும்
பரிந்துசென்றுவிண்ணப்பஞ்செய்யப்பரமரருட்கடைக்கண்
புரிந்துதேவர்தத்தநிலைக்குறுதியாகப்புகன்றருளி. (உ0)

செந்தாமரைக்கட்டிருமறுத்தமார்பிற்றிருமான்முகநோக்கிச்
சந்தார்புயத்தநறுங்கொன்றைத்தாரோனுரைப்பார்னியுமையாம்
பந்தார்விரலியுடன்சூதுபலகாலம்படிபார்த்து
முந்தாதுள்ளபடியுரைப்பாயெனவேமுகுந்தன்மொழிகின்றான் (உக)

அடியேனுய்ந்தேனுய்ந்தேனென்றங்கைகூப்பிமுடியடியிற், படி
யுமாறுபணிந்திருந்தானிமலன்பாவைமுகநோக்கித், துடியேரிடைப்
பெண்கொடியேயாரூதுகொணுவென்றெடுத்துரைப்பப், படிவமெழு
தவரியமயிலாங்கோசேடிமுகம்பார்த்தாள். உஉ)

அன்னகாலைவற்பலகைகவறுமுதலாவனைத்தினையு
மின்னேனரிடையாடரவவைகனங்கையேற்றுவிரைமலர்மேற்
பொன்னுல்ணிந்தவணிபிறழாதொதுங்கிடந்தபூங்கொடியே
யன்னுடிருமுன்பரப்புதலுமனுகிமூர்த்தியுடனிருத்தி, (உங)

ஞானவடிவாம்பரஞ்சோதிநளினவதனத்துமையேநீ,கானமலர்
ப்பூம்பொகுட்டிருந்தோனிழைத்தகதிர்செய்மணிப்பலகைத், தான
முறையான்மரகதவல்லிருத்திவயிரத்தனிச்சூலை,மேன்மைவிளங்க
நம்பக்கல்விரித்தியென்னவருள்செய்தான். (௨௪)

அவ்வாறியற்றிமாணிக்கத்தவிர்சூதகங்கையாலெடுத்துச்
செவவேவிரிக்கவிரண்டாறுசிறந்துபிறழ்ச்சிவபெருமா
னவவிநோக்கிகரத்தினின்றும்வாங்கிப்புரட்டநாலர்றே
யொவவாமுறையாலவவவறையீராறுகத்திரித்துரைத்தான். (௨௫)

பின்னும்பின்னுமவ்வாறெம்பிராட்டியார்க்குவுருசயத்தைத்
தன்னதாக்கிக்கோடீரந்தயங்கமதிவெண்கொழுந்தசையச்
சொன்னமுறையேமுடித்தளக்கியிறையோன்கூறச்சுடர்த்தொடியெ
மன்னையிமயமலைவல்லிசற்றேயெள்ளியகங்கறுத்தாள். (௨௬)

பரமானந்தப்பிழம்புருவாமபலையேதானுய்வடிவுகொண்டு
வரமான்மாக்கட்கருள்புரியவல்லோனபகிழ்ம்விளையாட்டுங்
குரமாம்வகையான்மேன்மேலத்திறமேபுரியவூடியுமை
பிரமாதியர்கண்மணிமுடிகளிடறநடந்தாள்பெட்புறவே. (௨௭)

நெற்றித்தனிக்கட்சுடரொழுந்துபடர்ந்தாலென்னநிமிர்சடையோன்
கற்றைக்கருமென்குழற்கொடியைக்கடுகச்சென்றுகரமலரைப
பற்றிக்கொணர்ந்துநன்னயச்சொல்பகர்ந்துதிருத்திப்பாவாய்கே,
ளுற்றதுரைத்தேந்தவறியம்பேமெனாவுலகுக்கொருமுதல்வன் ()

மான்ழையொண்கண்மாங்குயில்போன்மிழற்றுமதுரத்தனிமொழியால்
யாழைப்பழித்தமயிற்சாயலிளங்கொம்பன்னவிமயவல்லி,
யூழைத்துரந்தெவ்வுயிர்களுக்குமுயர்வீடளிக்குமுபாயநிலைச்
சூழப்புக்கதனிமுதலேசூழினெவ்வையாகாதனவே. (௨௯)

ஆயர்ந்திதிருவுளங்கொண்டருளவேண்டுமெலாககமலை
மேயமுகுந்தனநிலையுக்கடவாதுள்ளமெய்வழக்காற்
பாயுப்பிறழுங்கவற்றினத்திற்கண்டபணத்தைப்பலரறிய
மேயவுலாத்துவிளையாடப்புரிந்தாற்புரிவோமெனவிதித்தாள். (௬0)

மற்றவர்றேமுன்னும்யாம்புரிந்தவண்ணமணிக்குழைக
ளுற்று ப்பிறழுங்கருநெடுங்கண்ணுமைகேளினியுன்மனமகிழச்
சொற்றவண்ணம்புரிகுதும்வல்லாடலொருடங்கென்றிரந்துரைப்பச்
செற்றமகன்றெம்பெருமாட்டியாடலொருடுத்தாடிருமுன்பே. (௬௧)

செந்தாமரையினகவிதழ்ப்பழித்துத்திகழ்ந்ததிருக்கரத்தாற்
பந்தார்விரலியிறைவிகவறெடுத்துப்புரட்டப்பன்னிரண்டு
விந்தேதோன்றயிருக்காலெட்டானபகடைவரவரக்கண்
டந்தாமரைபோன்முகமலரவண்ணலாடலொருடுத்தனனால். (௬௨)

ஆங்குத்தோன்றுவனவெல்லாமாறுநான்குமூன்றொன்றே
யோங்கித்தோன்றப்பகடைமுதலிருக்காலெட்டாவுளத்திருத்தப்
பாங்கிலுறைதாமோதரனுமவ்வாறுரைக்கும்படிகடைக்கண்
ணூங்குப்புரிந்துதிருவிளையாட்டுவெந்தாமேனுமென்பதப்பொருளே. ()

கங்கைகரந்தகடவுடிருவிளையாட்டென்னுங்கருத்துணர்ந்த
செங்கண்மாயோன்முகநோக்கித்தேவியுளத்திற்கொண்டியம்பு
நங்கள்பெருமான்வினயங்களெல்லாமுள்ளபடிநவில்வாய்
பங்கமணிந்தபுத்தேளேசாட்சிகூறித்தேமிதற்கிசைய. (௬௪)

ான்லோடுங்காயாம்பூமேனிமாயனெடுத்துரைப்பான், பொன்னரி
ழித்துணர்சடிலத்திங்கட்கொழுந்தைப்புணர்பொருட்டாற், பன
முகத்தின்சிறுகுஞ்சொன்றேடிப்பையவங்காந்திருந்த, தன்னேயது
ரார்த்திருந்தயதிபிறழ்ந்ததினியாழ்ந்தறிந்துரைப்பேன். (௬௫)

ஆமிச்செயல்கொண்டீகஞ்சிவப்பதென்ஊயமலத்தனிமுதல்வன்
காமித்துரைத்தவாறியற்றல்கடனுஞ்சலனக்கருத்தேதன்னே
வாமித்திருந்தவெனக்குமவ்வாறென்னிரேறுவென்மடம்பயிர்ப்பு
சேமித்திருந்ததிருக்கடைக்கட்பிராட்டியென்றுதெரித்துரைத்தார்.

உரைத்தவாறுமனங்கொள்ளாதூடல்பெருக்கிமாதவனீ
நிரைத்தசொற்கணவேன்மைநினக்கேதெரியுமதுநிற்கக்
கரித்தசுரும்புபாட்டயருங்கொன்றைமாலைக்கடவுளையா
னிரப்பமதியாவகைபுரிந்தவெல்லாங்காண்டியெனவுரைத்தே. (ருஎ)

வண்மையாண்மைத்வம்பொறுமைமானர்ஃபொய்யாவழக்கிவைக
ளுண்மையுடையோரணுவேனும்பிறழார்பிறழினாழிபெயர்ந்
தெண்மைதிரிந்தமுச்சுடருமாறியுலகமிழக்குமெனத்
திண்மையுடையோரறிந்துளைப்பதெல்லாந்தெரிந்தசிவமுதல்வன்.()

பொற்புநிகழுவிளையாடும்பொருட்டாற்குறித்தகுதினிலை,யற்பமன்றி
மகத்தாமோவடைவைந்தொழிலுமியற்றுமிவர், கற்பப்படியேமெய்
யுரைததுவெல்லவேண்டுங்களவுரைத்து,நிற்பதறமோவுரைமுகுந்தா
வென்றுள்சென்றோர்நிலையிருந்தாள். (ருகூ)

மெய்ம்மைநோக்கியோகிருக்குமவர்போன்முகுர்த்தம்விழைவின்றி
யையவுணர்வாற்சவலைநினைவென்கொலமலர்க்காருமெழிற்
பொய்யினுடங்குநுண்ணிடைமேற்புலம்பும்பருமவகலல்குற்
றையலேயுன்சயமுமரன்சயமுமுனக்கேசாற்றுவரால். (சுo)

ஆனமுறையாற்பலவுநினைந்தாடல்புரியவேண்டுமெனக்
கானத்துளவோனுணர்த்ததுலுங்கனன்றுதேவிமொழிந்தருளுந்
தானமறிந்துநிலைபறிந்துகூறுதென்னைச்சவலையென்று
யூனமுனக்கேதவுரையாதோர்பாலுரைக்கவுணரரியே. (சுக)

என்றுபலவுமெடுத்துரைத்தெம்பிராட்டிகூறமெரிசுடரே
குன்றுவில்லிதிருநயனமதனுற்பொய்ம்மைகூறிலரே
லின்றெங்கரத்தாலவ்விழிகள்புதைப்பவுலகமிருண்மூழ்கின்
மன்றவின்றபாற்றவருருமின்றேலெனக்காமெனவரித்து. (௬உ)

பல்காற்றெறிந்துவெஞ்சினத்தாற்கூறுமொழியின்பயனுணர்ந்து, பில்காரெயிற்றுவிடவரவப்பெருமானிசையச்சார்ங்கியுமங், கொல்கா துறையப்புன்னனிகொண்டொய்யென்றெழுந்துகரமலரான், மல்கா தடங்கவொளிகள்விழிபுதைத்தாளிருண்டமாதிரமே. (௬௩)

வையம்விளக்குஞ்சுடரிரண்டுமுறையக்குவிந்தமாநயனச்
செய்யகமலமயன்கழலந்தேவிதிருமாதுறைகமலந்
தையல்வாணிவளர்கமலஞ்சாற்றுந்தவத்தோருளக்கமலந்
தெய்வந்தியச்செழுங்கமலந்திரைநீர்க்கமலமுழுவதுமே. (௬௪)

பகல்கான்றிருஞாப்பருதியொளிர்பரிதிப்புத்தேண்மதிக்கடவு
ளிகல்கான்றிரவோடேனுறையவெய்துங்காலமிஃதென்றோல்
புகலாநின்றதின்றினியாம்புகலுமுறைமைத்தெவனென்றே
யகலாநின்றூர்கணிதமுறைவல்லாரயவருமூனிவர். (௬௫)

சுடரோனீபாவமிருளெனவேதுணிந்ததுணிவேயுவமையான்
மடமார்மூலமலமேயின்றென்றுஞானுபாவமதித்
தடலேதெனவேவென்றிமொழிதர்க்கவாதியகாணக்
கடலூழிருளிலொளித்திருந்தான்வெய்யோனென்பகலைஞர்களே. ()

வேறு.

பொய்த்தெழினுண்ணிடையிமயப் பொருப்பரையன்மடப்பா வைபுரிமென்கூந்த, னெய்த்தெழில்செய்வடிவாகப்பன்னெடுநாட்கரு ணைவரநிலஸ்லாலோ, மைத்தெழிநீர்பரிதியொடுவெண்மதியுநாணவி ருண்மல்குமாறு, கைத்தளிராற்பராபரையெம்பிராட்டியிறைவிழிபு தைத்தகாட்சிதானே. (௬௭)

ஆடியொளிரவமணியிலை விரொளிகண்ணொளிமுதலாவனைத்தும்வெய்
யோன், கூடியகாலத்தளவாய்மற்றைக்காலத்திலவாங்கொள்கையே
ய்ப்பப், பாடியல்விண்மணிப்பரிதிப்புத்தேளுமதிக்கோனும்படிமப்
பாவை, மூடியகண்ணொளிவிரவாதியந்திரம்போலிருந்தனரென்மொ
ழிகுவாமே. (சஅ)

பாயொளியாலிருள்சீக்கும்பரிதியதிசெல்லவொழிந்துபயிலுமாற்றான்
மேயவிருளெப்பொருளும்விரவிபகர்கேவலம்போல்விரியுமாற்றா
ணுபகனார்புரமடுவான்றிசைகாலமில்வழக்காய்நாட்டுமாயன், மேயவு
ரைக்கிலக்கியமாயறிவுடைமேலோர்விதித்துவிளம்புவாரால். (சகூ)

பொற்புறுலோகாலோகப்பெயரையொருங்கிரிக்குநூல்புகலுமந்த, வற்
புதமாவரைமுழுதும்பேரிருளின்மூழ்கியுருவடங்குமாற்றாற், பற்பலவு
வாகியவரையிலொன்றெனலாய்க்காரணப்பேர்பலியாவாகிச், சொற்
பொருட்கோரிடுகுறியாய்நின்றனவேற்றமோவீக்கஞ்சொலற்பாற்ற
ன்றே. (ருo)

இம்முறையசற்சராசரங்களண்டகடாகந்திசைகோளிராசிவான்மீன்
மம்மர்தருதிமிரகணங்கற்பமாயிரமன்றப்பமயங்கிலோக,மிம்முறைசெ
ய்குவதுறுதியிஃதொழிதன்முறைமையெனுமெண்ணமின்றி, யம்ம
வோவெனவரற்றியிடர்க்கடலின்மூழ்கியறிவயர்ந்தவன்றே. (ருக)

தேவர்கடவுளர்முனிவர்சித்தர்மருத்துவரியக்கர்திசைகாப்பாளர்,பூவ
யனாதியவுலகப்பேருரிமைபூண்டுயர்ந்தபுகழ்ப்புத்தேளிர், யாவர்களுந்
தயிற்குழீஇயெழுந்துகயிலைப்பொருப்பினேறிச்சென்று, காவல்பல
கடைகடந்துமணிக்கடைவாயிலினந்திகழலிற்றாழ்ந்தார். (ருஉ)

ஓதுநாலுறுதிவழியுகாந்தம்வரன்முறைமைத்தியாமுளத்துந்தேறா
மேதெனநாமெடுத்துரைப்பதகாலத்தேகடைநாள்வந்திறுத்தலின்றே
மாதொருகூறுடையபிரான் பெருங்கருணைவிளையாடன் மதித்ததே
யோ,வேதமுறுமடியோங்கடீவினையோவீதெனயாமறிகிலேமால்.